# THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

## SATHIAVARTHAMANI

September, 1955

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 OCT 1955
MADRAS

# மதுரை-ராமநாதபுரம்

# அத்தியட்சாதீனத் தீபிகை

## சத்தியவர்த்தமானி

செப்டெம்பர், 1955

# மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

**பத்திராதிபர் :—** A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை,
மதுரை ஜில்லா.

**உதவி பத்திராதிபர்:—** C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்,
ராமநாதபுரம் ஜில்லா.

**மானேஜர் :—** கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

**பதிப்பாளர் :—** சங்கை C. P. ஹைனமென், விஞ்க்ஸ் பிரஸ், பசுமலை,
மதுரை ஜில்லா.

## முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம்
2. திருச்சபைச் செய்திகள்.
3. பிரசங்கக் குறிப்புகள்.
4. இளைஞர் ஏடு
5. இயேசுவின் ஜெயப்பள்ளி.
6. கி.மு. சங்கப் பொருட்கள்.
7. சிலமுக்கிய அறிவிப்புகள்.
8. தெய்வ நம்பிக்கை (கட்டுரை)
9. உலக விவகாரம்.

தென் இந்திய சபையைச் சேர்ந்த

மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

# சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XVI    பசுமலை, செப்டெம்பர் 1955    இலக்கம் 11

வருடசந்தா : 1 ரூ. தபாற்கூலி உட்பட.

## அத்தியட்சரின் கடிதம்

21 OCT 1955
MADRAS

தல்லாகுளம், மதுரை.
ஆகஸ்டு 18, 1955.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள [illegible]—

பரிசுத்த ஆவியின் ஏவுதலால் 1953ம் ஆண்டு சபை ஆவிக்குரிய பிரகாரமாய் உயிர்ப்பிக்கப்படும் பொருட்டு மூன்றாண்டுத் திட்டம் ஒன்று வகுத்ததை நீங்கள் நன்கறிவீர்கள். 1953—54-ம் வருடம் நாமனைவரும் சபையின் எழுப்புதலுக்காக ஜெபித்தோம். 1954—55-ல் ஆவிக்குரிய கூட்டங்களுக்குப்பின் எழுப்புதற்கூட்டங்கள் பல பாஸ்டரேட்டுகளில் நடைபெற்றன. இதன் பலனாக நமது சபைகளிலுள்ள பல இடங்களில் பரிசுத்தாவியின் கிரியைகள் புதிதாக நடப்பிக்கப்படும் அறிகுறிகள் உண்டென கடவுளுக்கு நன்றி கூறுகிறோம். ஏற்பட்ட திட்டத்தின்படி 1955—56-ம் வருடம் சாட்சிபகரும் வருடம். இதைப்பற்றி இக்கடிதத்தில் சிறிது கூற விரும்புகிறேன்.

கடந்த வாரம் நடந்த குருமார் கூட்டத்திலும், அத்தியட்சாதீன சுவிசேஷ ஊழியக் கமிற்றிக் கூட்டத்திலும், சாட்சி கூறுகிற இந்த வருடத்திற்குரிய ஒழுங்குகள் ஆலோசிக்கப்பட்டன. வருகிற வாரங்களில் இதைப்பற்றிய விவரங்கள் வெளிவரும். ஒவ்வொரு தனிச்சபையும் தங்கள் நண்பர், இனத்தவர், அயலகத்தாருக்கு கடவுளின் நற்செய்தியை கூறி உற்சாகமாய் அறிவிக்கும்படி தட்டி எழுப்பப்படவேண்டுமென்பதே முக்கிய நோக்கம். இதை வாசிக்கும் நேயர் தன்னிலும் தனது சபையிலும் இது நிறைவேற வேண்டுமென ஆசித்து ஜெபித்துவரவும்.

சாட்சி பகரும் வருடத்தின் ஆரம்பமாக ஆவிக்குரிய கூட்டங்கள் நடக்கும். செப்டெம்பர் மீ 28—30உ களில் இது மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடைபெறும் கூட்டங்களின் பொருள் "சாட்சி பகருதல்". யாழ்பாண ஆசிரமத்தைச் சேர்ந்த கனம் எஸ். செல்வரத்தினம் ஐயர் பேச்சாளர். இதைப்பற்றிய விவரங்கள் சீக்கிரம வெளிவரும் ஆனால் ஏற்கனவே இதைப்பற்றி உங்கள் சபையாரிடமும் சொல்லி அதற்காக ஜெபித்து வாருங்கள்.

மற்றொரு காரியத்தைப்பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். சபையின் குருத்துவத் திருப்பணிக்காக ஆட்கள் தேவை என்பது உங்களிலனேகருக்குத் தெரியும் இப்போது பயிற்சிபெற்று வருகிறவர்களின் தொகை வருகிற ஐந்து ஆண்டுகளில் ஊழியத்தை விட்டு நீங்கும் ஆட்களுடைய ஸ்தானத்திற்குப் போதுமானதல்ல. கடவுளுடைய ஊழியத்தைச் செய்து வருகிற நீங்கள் குருத்துவ ஊழியத்திற்குரிய வாலிபரைக் கண்டுபிடிக்கும வேலையை அவ்வூழியத்தின் ஒருபாகமாகக் கருதும்படி கேட்கிறேன். தமது ஊழியத்திற்கு தகுந்த நலமானவாகளே கடவுளுக்குத் தேவை. குணசீலமும் தாலந்துமுள்ள ஓர் வாலிபனைப் பார்த்தால் "உம்மைக் குருத்துவ ஊழியத்திற்கு கடவுள் விரும்புகிறார்" என்பதை ஆலோசிக்கும்படி ஏவுவதே உங்கள் கடமையாகும். நாம் ஒவ்வொருவரும் இதன் சம்பந்தமாய்ப் பொறுப்பை உணரும்போதுதான் இந்தக் குறைவை நிவிர்த்திக்க முடியும்.

கனம் வில்லி ஹௌர்த் அம்மாள் விடுமுறை காலத்திற்குப் பின் வந்து சாட்சியாபுரத்தில் ஊழியம் செய்து வருகிறார்கள். கனம் மார்ஜரி ஸ்மித் அம்மாள் கூடியசீக்கிரம் விடுமுறைக்காகச் செல்வார்கள்.

இப்படிக்கு,

கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,

**லெஸ்லி நியூபிகின்,**

அத்தியட்சர்.

---

## அத்தியட்சரின் அலுவல்கள்

| | | |
|---|---|---|
| செப்ட். | 8—11 | வேலூர்—தமிழ் நாடு கிறிஸ்தவ சங்கம். |
| | 16—17 | கோம்பை—மலையிலுள்ள சபைகளைச் சந்தித்தல். |
| | 17—18 | கம்பம் – மலைச் சபைகள்—திடப்படுத்தல். |

22 சிவகாசி — திருவேங்கடபுரம் திடப்படுத்தல்
23—25 ஸ்ரீவில்லிபுத்தூர் — திடப்படுத்தல் — சுவிசேஷ ஊழியம்.

28—30 மதுரை — ஆவிக்குரிய கூட்டங்கள்.
அக்ட். 1—2 பெருநாளி — திடப்படுத்தல்
8—10 சிவகங்கை — திடப்படுத்தல்

---

## திருச்சபைச் செய்திகள்

**1.** சபையின் திருநாட்கள்.

அக்ட். 2 திரி. திரு பின் ஞாயிறு 18
(சர்வலோக நற்கருணை ஞாயிறு)
9 திரி. திரு. பின் ஞாயிறு 19
(மிஷனரி சங்கங்கள்)
16 திரி. திரு. பின் ஞாயிறு 20
18 பரி. லூக்காவின் திருநாள்
23 திரி. திரு. பின் ஞாயிறு 21
28 பரி. சீமோன் பரி. யூதா திருநாள்
30 திரி. திரு. பின் ஞாயிறு 22

**2.** பரி. மார்ட்டின் ஆஸ்பத்திரி, ராமனுதபுரம்.

ராமனுதபுரம், பரிசுத்த மார்ட்டின் வைத்தியசாலை பல வருஷங்களாக, ராமனுதபுரத்திலும், சுற்றிலும் உள்ள இடங்களிலும் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் வேண்டிய வைத்திய உதவியை கடவுளின் பெரிதான கிருபையால் நடத்தி வருகிறது. ஆண்களும் அநேகர் இந்த உதவியைப் பெற ஆவலாயிருந்தும் இதுவரையும் அது முடியாததாக இருந்தது. விசேஷமாக சில பெண்கள் இங்கு சிகிச்சை பெறும்பொழுது அவர்களுடைய புருஷருக்கும் சில சிகிச்சைகள் செய்யவேண்டிய அவசரம் ஏற்படும். அச்சமயம் ஊரிலுள்ள மற்ற டாக்டர்மாரிடம் அவர்களை அனுப்பவேண்டியிருந்தது ஆகையால் அநேக வருஷங்களாக மிகத் தேவையாயிருந்த ஒரு ஆண்களின் பகுதி இந்த மார்ச் மாதம் ஏற்படுத்த ஒரு பெரிய சிலாக்கியம கிடைத்தது. அதாவது 4 பேர் படுக்கக்கூடிய இடமுள்ள ஒரு அறையும், சோதனைக்காகக்கூடிய ஒரு சிறிய அறையும், அமைந்த ஒரு வார்டு அநேகமாக, மேல் நாட்டு பண உதவியினுலும் பக்கங்களிலுள்ள சிநேகிதரின் நன்கொடையாலும், கட்டப்

பட்டது. அதற்காக ஒரு ஆண் டாக்டரும் பொறுப்பாக இருக்கிறூர். இவர் இங்குள்ள இந்த வார்டையும், வெளியிலிருந்து வரும் நோயாளிகளையும் பார்ப்பதோடு கூட, இதர கிராமங்களுக்குப் போய் அங்கும் வேலே செய்து வருகிருர். அதிக நோய்வாய்பட்டு இருப்பவர்களை இங்கு கொண்டுவந்து ஆஸ்பத்திரியினுள் சேர்க்கிருர். அநேகர் உள்வந்து சிகிச்சையடைய ஆயத்தமாயிருக்கிருர்கள். வெளியிலிருந்து தினம் வந்து போகிறவர்களின் தொகை கூடிக் கொண்டேயிருக்கிறது. ஆண்டவர் தாமே தமது ஊழியத்தை நடத்துவதற்கு வேண்டிய சகல ஏதுக்களையும் நாங்கள் பெற்றுக் கொள்ளத்தக்க வழியை கட்டளையிடுவாராக.

நேயர்கள் யாவரும் இந்த புதிய பகுதியை தங்கள் ஜெபங்களில் நினைத்துக் கொள்ள அன்பாகக் கேட்டுக்கொள்ளுகிருேம்.

**3.** கிறிஸ்தவ வாலிப சங்கம் (Y.M.C.A.) நூற்ருண்டு விழா

பாரிஸ் நகரில் ஆகஸ்டு மாதம் நடைபெற்றது சுமார் 10000 பிரதிநிதிகள் எண்பதுக்கு மேலான நாடுகளிலிருந்து வந்தனர். இதையொட்டி மதுரை சங்கமும் ஆகஸ்டுமீ 22—28வ களில் விழா நடத்தியது. பாரிஸ் பட்டணத்தில்தான் முதன் முதலாக இச்சங்கம் ஆகஸ்டு 22 1855ல் திறவப்பட்டது

**4.** பாரத கிறிஸ்தவ சேவா சமாஜம் (N.M.S.)

இதன் பொன் விழா அக்டோபர்மீ நடக்கும். அக்ட் 2—7 ஜெபநாட்களாகவும், 8ம்வ ஞாபகார்த்த நாளாகவும், 9ம்வ ஸ்தோத்திர நாளாகவும் கொண்டாடப்படும்.

**5.** முதியோர் கல்வி திட்டத்தில் எழுத்தறிவிப்பின் நிலைமை.

(ப. மு. கோபாலகிருஷ்ணன், செயலாளர், முதியோர் கல்வி கமிற்றி)

இக்கட்டுரை பெரும்பாலும் அகில இந்திய கிறிஸ்தவ கௌன்சில் மே மாத சஞ்சிகையில் மேற்படி கௌன்சிலின் எழுத்தறிவிப்புக் கமிட்டியின் செயலாளரான திருமறை நௌமென் ஐயரவர்கள் எழுதிய விரிவுரையிலிருந்து தொகுத்து வரையப் பெற்றது. அவர் நியூயார்க் பட்டணத்திலுள்ள கிறிஸ்தவ உலக எழுத்தறிவிப்பும் நூலகமுமான கட்டடத்துக்குள் சென்றபோது மூன்று உலகப் படங்கள் தொங்குவதைப் பார்த்தாராம். அம்மூன்று படங்களிலும் சில உண்மைகளைத் தெளிவுற விளக்கும் சில வர்ணங்கள் தீட்டியிருந்ததாம்.

முதல் படத்தின் கறுப்பு பாகம் உலகத்தில் சிசு மரணம் அதிகமிருப்பதையும் அதிலுள்ள மூத்தோரின் சராசரி ஆயுள் காலநீடிப்பு 30 வயது தான் என்பதையும குறித்ததாம். இரண்டாவது படத்தின்

கறுப்பு பாகம் பசிப்பிணியால் புழுவெனத் துடிக்கும் மக்கள் ஏராள மாயுள்ள இடங்களைக் காட்டிற்றும். மூன்றாவது படமோவெனில் கறுப்பு பாகம் 60 முதல் 100 சதவிகிதம் வரையில் எழுதப் படிக்கத் தெரியாத பேதை மக்கள் நிறைந்த இடங்களாக விளக்கிற்றும். மன அமைதியைக் குலைக்க இந்த மூன்று படங்களிலும் உள்ளவை பெரும்பாலும் அதே இடங்களாகையால் ஒரே படத்தில் அவைகளை விளக்கியிருக்கக்கூடுமாம.

அநேக நூற்றாண்டுகளாக நூறுயிரகோடி மக்களுக்கு மேல் தரித்திரம், சதா மற்றவர்களை அண்டிப் பிழைக்கும் ஈனமான நிலைமை, அறியாமை வியாதி முதலியவற்றால் துன்புறும் மாந்தர் அல்லல் கள் சொல்லத்தரமோ!

முப்பத்தாறு கோடி மக்கள் கொண்ட நமது இந்தியா தேசத்தைத்தான் கறுப்பு பாகங்கள் விசேஷமாய்ச் சுட்டிக் காட்டின வென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அதில் படித்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளக்கூடியவர்கள் 6 கோடி. நூற்றுக்கு 16·6 சதவிகிதம். இதில் ஆறு லக்ஷம் பேர்கள் கொஞ்சம் படிக்கக்கூடியவர்கள். ஆனால் எழுதமுடியாது. இதில் 5 கோடி பேர்கள் எட்டாவது வகுப்பை எட்டிப்பிடிக்க வகையற்றவர்கள். இந்த நிலைமையை உணர்ந்த தேச பக்தர்கள், சபைத் தலைவர்கள் நடுக்கமுற்று ஏதாவது செய்யலாமென்று திட்டங்கள் வகுக்கும் இச்சமயத்தில் பொதுவுடமைக் கட்சியினர் ஏழைமக்கள் மனங்களைக் குழப்புகின்றனர் கடந்த முப்பது வருடங்களாக மக்களுக்குள் விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. திருச்சபை இதை ஆதாயப்படுத்திக்கொண்டு தக்கது செய்யத தாமதித்தல் அபசாரமாகும்.

எழுத்தறிவிப்பு முறைகளை இலகுவாக்கிய மகா மேதாவியான டாக்டர் லாபாக் என்பவர் இவ்வூழியம் புறமதத்தினரை மிகவும் கவர்ந்து கிறிஸ்தவர்களிடம் விசேஷ அபிமானத்தைக் காட்ட தூண்டுகோலாயிருக்கிறது என்கிறார் இது சுவிசேஷப் பிரபல்லிய வேலைக்கு சிறந்த சாதகம் என்பது அவர் அனுபவம். பல தேசங்களின் சர்க்காரின் ஒத்துழைப்பு இதன் மூலமாய் டாக்டர லாபாக் அவர்களுக்குக் கிடைத்துள்ளது கடந்த இருபது வருடங்களில் உலகத்தில் அறுபது நாடுகளில் இருநூறு பாஷைகளை சுலப நடையில் உருவாக்கிய நிபுணருக்கு நாம் செவிகொடுப்போமாக.

இவ்வித ஊழியம் சித்தியாக நடைபெறாதது திருச்சபையின் அழகை பங்கப்படுத்தினதாகும் நமது தேசத்தில் ஆந்திர நாட்டின் சில பாகங்கள்ல் 27. சதவிகிதம் பாமர மக்கள் எழுத்தறிவிப்பில் தேர்ச்சியடைந்திருப்பதாகக் காணப்படுகிறது. மற்ற பாகங்களில் அதுவும் இல்லை.

டாக்டர் லாபாக் "உலகத்தின் பிற்போக்கான பாகங்களில் 120 இலக்ஷம் கிறிஸ்தவர்களுள்ளனர். அவர்களைப் படிப்பித்து ஒவ்வொரு ஆளும் மற்றொரு ஆளுக்குக் கற்பிக்க வேண்டுமென்று ஒரு திட்டம் போட்டு சாதிக்க முடியுமானால் மகத்தான வெற்றி நிச்சயம்" என்று பறைசாற்றுகிறார் ஒரு நல்ல அளவுக்கு உபயோகிக்கப்படும்படி இதற்காக அமெரிக்க நாட்டுக் கிறிஸ்துவின் அடியார்கள் திரண்ட திரவியம் திரட்டி அனுப்பி வருகின்றனர். ஆனால் நமது முயற்சியும் தியாகமும் இல்லாமல் எவ்வேலையும் மேலேற முடியாது.

**6. மாணமதுரையில் ஆவிக்குரிய கூட்டங்கள்**

பங்காருபேட்டை தெ. இ. வேதாகம சங்கத்தைச் சேர்ந்த கனம் பி. சாமுவேல் அவர்களால் வேத உபந்நியாசங்களும் படப் பிரசங்கங்களும் நடந்ததின் பயனாய் மாணவ மாணவிகளுக்குள் ஆவிக்குரிய சிந்தை வளர்ந்திருக்கிறதென நண்பர் எஸ். ராபர்ட் ஆசிரியர் எழுதுகிறார்.

**7. சுவிசேஷக் குழுவினரின் ஊழியம்.**

இவர்களுடைய ஊழியம் பலனைக் கொடுத்துக்கொண்டே வருகிறது கள்ளிமந்தயம் அருகிலுள்ள கோடாங்கிபட்டி, அரண்மனை வலசு என்னும் இரு கிராமங்களில் சுமார் 37 பேர் கனம் அத்தியட்சரவர்களால் ஜூலை மாதம் ஞானஸ்நானதீட்சை பெற்றனர். அதோடு வாடிப்பட்டி, பொருளூர் ஆகிய கிராமங்களில் சுமார் 52 பேர் உட்சபையில் சேர்ந்தனர். தற்போது சமுதிக்கருகிலுள்ள நெரிஞ்சிபட்டியில் இக்குழு ஊழியம் நடப்பித்து வருகிறது. வாசகர்கள் ஜெபிக்கவும் எனததலைவர் காலின்ஸ் எழுதுகிறார்.

**8. கிருபா நிலயம்.**

அங்கவீனர், குருடர், அனாதைகள் தங்க இடமின்றி ஆதரிக்க இனத்தவரின்றி பிச்சையெடுப்பதைவிட வேறு வழியில்லை என்று வருந்துகிறவர்களுக்கு அடைக்கலமாக "கிருபா நிலயம்" என்று அனாதைகளின் விடுதி வேலூரில் திறக்கப்பட்டிருக்கிறது. ஜாதிமத பேதமில்லை தொத்து நோயாளிகளுக்கும் குஷ்டரோகிகளுக்கும் இங்கு அனுமதியில்லை. தேவைப்பட்டவர்கள் கனம் எஸ் பொன்னுரங்கம், தென் இந்திய திருச்சபை, வேலூர், வட ஆற்காடு என்ற விலாசத்திற்கெழுதவும என அதின் தலைவர் திரு சவரிராயனவர்கள் எழுதுகிறார்கள்.

**9. வாலிப பெண்களின் கூட்டம்.**

வாலிப பெண்களின் சங்கம் தல்லாகுளத்தில் ஆகஸ்டு 6ம் தேதி ஸ்தாபிக்கப்பட்டது. முப்பது பெண்கள் அக்கூட்டத்திற்கு வந்தார்கள். அத்தியட்சாதீன இளைஞர் சங்கக் காரியதரிசியாக கனம் கிரகரி

ஜயர் கூட்டத்தில் தலைமை வகித்தார். இயேசுகிறிஸ்து மறுரூப மானதையும் அவருடைய சீஷர்கள் சபையிலே செய்த சேவையை யும்பற்றிச் சொன்னார். பேதுரு, யாக்கோபு, யோவான் ஒவ்வொரு வரும் செய்த சிறந்த சேவையை விளக்கி வாலிபப் பெண்கள் கிறிஸ்துவுக்காகவும் சபைக்காகவும் எவ்விதம் பணியாற்றலாம் என் பதை விவரித்துக் கூறினார். கிறிஸ்தவ வாலிப சங்கத்தின் நோக்கம், உருவாக்குதல் கடமை, பிரதிஷ்டை இவைகளைப்பற்றி கனம் ரூபி அழகுமணி பேசினார்கள் என அக்கூட்டத்தின் கௌரவக் காரிய தரிசி கனம் எட்வட்ஸ் அம்மையார் எழுதுகிறார்கள்.

---

## பிரசங்கக் குறிப்புகள்

(கனம் தவமணி ஐயர், சீழக்கரை)

### தேவ இரக்கம்

நம்முடைய தேவன் :—

| | |
|---|---|
| *இரக்கங்களின் பிதா* | II *கொரி.* 1 : 3 |
| *இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர்* | *எபே.* 2 : 4 |
| *இரக்கஞ் செய்கிறவர்* | *யாத்.* 20 : 6 |
| *இரக்கத்தைக் காக்கிறவர்* | *யாத்.* 34 : 6 |

அவருடைய இரக்கம் :—

| | |
|---|---|
| *காலைதோறும் புதியது* | *புலம்.* 3 : 22 |
| *மகா பெரியது* | II *சாமு.* 24 : 14 |
| *மிகுதியானது* | *நெகே.* 9 : 27 |
| *அநாதிகாலமுதலுள்ளது* | *சங்.* 25 : 6 |

மேலும் அது :—

| | |
|---|---|
| *அவருக்குப் பயந்தவர்களுக்கும்* | *சங்.* 103 : 13 *லூக்.* 1 : 50 |
| *மனந்திரும்புகிறவர்களுக்கும்* | *நீதி.* 28 : 13 |
| *திக்கற்றவர்களுக்கும்* | *ஓசி.* 14 : 3 |
| *சிறுமைப்பட்டவர்களுக்கும்* | *ஏசா.* 49 : 13, 54 : 7 |
| *இரக்க சிந்தையுள்ளவர்களுக்கும்* | *மத்.* 5 : 6 |

*அநுக்கிரகிக்கப்பட்டிருக்கிறது.*

---

# இளைஞர் ஏடு

வாலிபரால் எந்த நாடும்—இந்த
மாநிலத்தில் என்றும் மாண்புறக் கூடும்
சீலமிகும் இந்தச் சிந்தனையோடும் — இன்று
தீட்டினோம் இளைஞர்க்சாய் இச்சிறு ஏடும்

## உங்கள் வினாக்கட்கு விடைகள்

திரு. வி. ஜெயராஜ், B A., L.Th., மதுரை-இராமநாதபுர அத்தியட்சாதீனக்
கிறிஸ்தவ இலக்கிய எழுத்தாளர், பசுமலை.

(5) *மெஞ்ஞான உண்மையிலும், விஞ்ஞான உண்மை சிறந்ததல்லவா?*

விஞ்ஞான உலகில் "விஞ்ஞான உண்மை" சிறந்தது. மெஞ்ஞான உலகில் மெஞ்ஞான உண்மை சிறந்தது. விஞ்ஞான உலகு வேறு, மெஞ்ஞான உலகு வேறு. விஞ்ஞான உலகிற்குரிய விதிகளும் முறைகளும் உண்டு. மெஞ்ஞான உலகிற்குரிய விதிகளும் முறைகளும் உண்டு. இலக்கண விதிகளைக்கொண்டு ஒரு நாட்டையோ, வீட்டையோ ஆளலாம் என்பது எத்தனை மடமையோ அத்தனை மடமையே பௌதீக-இரசாயன விதிகளால், முறைகளால் மெஞ்ஞான உலகை அறியலாம் என்பதும். 'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறுமறிவு" என்ற இக் குறளுக்கு வர்க்கமூலம் (squareroot) காணமுடியுமா? விஞ்ஞானத்திற்கு எல்லாவற்றையும்பற்றி ஏதேனும் சொல்லமுடியுமே யொழிய, எதைப்பற்றியும் எல்லாவற்றையும் சொல்ல முடியாது. பௌதீக-இரசாயன விதிகளால், முறைகளால் அறியப்படும் பொருட்களும் உள. அறியப்படாத பொருட்களும் உள. ஓவியம், காவியம், சமயம் ஆகியவை விஞ்ஞானத்திற்குப் புறம்பானவை. தாயின் அன்பை, நண்பனின் நட்பை, கடவுளை பௌதீக-இரசாயன விதிகளால் அறியமுடியாது.

மேலும் உண்மை அழியாத்தன்மையது. காலத்தால், இடத்தால் மாறுபடாதது. உண்மை ஆளுக்கு ஆள், நாட்டுக்குநாடு வேறுபடாது. ஆனால் "விஞ்ஞான உண்மை" தற்காலிகமான உண்மையேயாம். இதற்கு எண்ணற்ற எடுத்துக்காட்டுகள் காட்டலாம். சிலவற்றை மட்டும கூறுவோம்.

பல நூற்றாண்டுகள்வரை வெப்பம் ஒரு பொருள் என்று விஞ்ஞானிகள் நம்பினா. ஆனால் 1799ல் கவுண்ட்ரம்போர்டும், சர் ஹம்ப்ரி டேவியும் வெப்பம் அணுக்களல்ல அணுக்களின் சலனம் என்று

முன்னைய 'விஞ்ஞான உண்மை'யைப் பொய்ப்பித்தனர். உயரத்தி லிருந்து விழும் வெவ்வேறு எடையுள்ள பொருட்களுள், அதிகக் கனமுள்ள பொருளே முதலில் தரையில் விழும் என்று அரிஸ்ட்டாட் டில் கூறினதை 19 நூற்றாண்டுகளாக விஞ்ஞானிகள் நம்பினர். ஆனால் கலிலியோ என்ற விஞ்ஞானி பைசாநகரச் சாய்ந்த கோபுரத் திலிருந்து, 10 பவுண்டு எடையுள்ள ஒரு இரும்பையும் 1 பவுண்டு எடையுள்ள ஒரு இரும்பையும் விழச்செய்து, இரண்டும் ஒரே சமயத் தில் தரையை அடைந்ததைக் காட்டி, முன்னைய 'விஞ்ஞான உண்மையை'ப் பொய்ப்பித்தார். "நீரைவிட எல்லா உலோகங்களும் கனமானவை" என்று விஞ்ஞானிகள் நம்பினர். ஆனால் பொட் டாஸியமும் சோடியமும் 1807ல் ஹம்ப்ரி டேவியால் கண்டுபிடிக்கப் பட்டபின் அது பொய்யானது. அலெக்ஸாண்டிரியா நகரத்தானான தோலமி "பூமி நிலையானது. அதன்மேல் வானம கிண்ணம்போல் கவிழ்க்கப்பட்டுள்ளது. சூரியன், நிலவு, கிரகங்கள் பலவும அவ் வானில் பதிக்கப்பட்டுள. வானே சுற்றுகிறது. அதனால் வான் சுடர் களும் சுற்றுகின்றன". என்று போதித்த 'விஞ்ஞான உண்மை' 'சூரியன்தான் நிலையாயிருப்பது. பூமிதான் அதனைச் சுற்றுகிறது' என்று போலந்து நாட்டு வான்கலை வல்லுநரான கோப்பர் நிகஸால் பொய்ப்பிக்கப்பட்டது. இதுகாறும் அணுவே சடப்பொருளின் கடைசி எல்லை என்றிருந்தார். ஆனால் இன்றோ. எலக்ட்ரான் களாலும், புரோட்டான்களாலும் ஆகியதே பிரபஞ்சம் என்கிறார் விஞ்ஞானிகள். எனவே "விஞ்ஞான உண்மை" நிரந்தரமான தன்று. வாழ்க்கையில், விஞ்ஞானமும் வேண்டும, மெஞ்ஞானமும் வேண்டும் என்றறிக.

(6) மோட்சம் நரகம் என்பவை உண்டா? உண்டாயின் அவை எங்குள ?

மோட்சம் என்பதும், நரகம் என்பதும் இடங்களல்ல. அவை முறையே இன்ப நிலையினையும் துன்ப நிலையினையும் குறிக்கும் சொற்கள். "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பின வராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" (யோவான் 17 : 3) என்றும், "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்" (யோவான் 5 : 24) என்றும் இயேசு நாதர் கூறினபடி கிறிஸ்துவுக்குள் கடவுளோடிருப்பதே நித்திய ஜீவன் அல்லது மோட்சம் என்ற இன்பநிலை. கடவுளோடிராதிருப் பதே "நரகம்" அல்லது துன்பநிலை என்பதே எமது கருத்து. ஆனால்

சிலர் ஏசாயா 14 : 13ஐ ஆதாரமாய்க் கொண்டும் வெளிப்படுத்தின விசேஷத்தைக் கொண்டும் மோட்சம் வானில், வடதிசையிலிருப்பதாகவும் கூறுவர். இது எமக்கு உடன்பாடன்று.

மகா கனம் நியூபிகின் அத்தியட்சர் அவர்கள் கூறுகிறபடி, "கடைசி யழிவைக் குறிப்பதற்குக் 'கெஹென்ன' (Geheuna) என்ற கிரேககச் சொல்லை இயேசுநாதர் பிரயோகம் செய்திருக்கின்றனர். எருசலேமின் குப்பை கூளங்கள் தள்ளப்படும் ஒரு பள்ளத்தாக்கு 'கெஹென்ன' எனப்பட்டது. அங்கு எப்போதும் தீ எரிந்து கொண்டிருக்கும். மக்கள் இறுதியில் பயனற்றவர்களாகி, எரிக்கப்படுவதற்கே தகுதியானவர்களாகும் சாத்தியத்தைக் குறிக்கும் அடையாளமாகவே அவருக்கு அந்தக் கெஹென்ன இருந்தது." "இரத்தமும் மாம்சமும் கடவுளுடைய இராஜியத்தைச் சுதந்தரிக்க முடியாது" என்று (1 கொரி. 15 : 50,ல் பவுலடிகள் கூறுகிறார். வெளி. 21 : 1-5ல் கண்டபடி கடவுள் இராஜியம் நிலை பெறும். இயேசுகிறிஸ்துவே அதற்காலயம். (வெளி. 21 : 11)

(7) என் ஜெபத்திற்குப் பதில் கிடையாததேன் ?

சத்திய வர்த்தமானியில் திங்கள் தோறும் கடந்த 22 திங்கள்களாக வெளிவரும் இயேசுவின் ஜெபப்பள்ளிப் பாடங்களை வாசித்தால் ஜெபத்திற்கு ஏன் பதில் கிடைக்கவில்லை என்பது தெளிவாகும்.

மேலும் ஒரு சமுசாரி, விளைந்த கதிர் நாசமாகும் என்று கருதி மழை வேண்டாம் என்று ஜெபித்தால், அது அருளப்படாது. ஏனெனில் அவர் ஒருவருக்கு மட்டும் நன்மையாய்த் தோன்றுவது கோடாகோடி மக்கட்குச் சேதமாயிருக்கும்.

மாங்தோப்பைக் குத்தகை யெடுத்தவன் காற்று வேண்டாமென்று ஜெபித்தாலும், எதிர்க்காற்றில் சைக்கிளில் போகிறவன் காற்று வேண்டாமென்று ஜெபித்தாலும் அருளப்படாது. ஏனெனில் அது பிறர் நலங்களைப் பாதிக்கும். 1 இரா. 19 : 4, 2 கொ. 12 : 8, 9, ஆபகூக் 2 : 3, மார்க் 4 : 35-41 என்ற பகுதிகளை ஆராய்க.

(8) நான் ஏன் கிறிஸ்துவை மட்டும் பின்பற்றவேண்டும் ?

இவ்வினவிற்கு நீர் ஏன் கிறிஸ்துவைமட்டும் பின்பற்ற வேண்டும் என்பதற்குக் காரணங்கள் காட்டுவதைப் பார்க்கிலும் நான் ஏன் கிறிஸ்துவை மட்டும் பின்பற்றுகிறேன் என்பதற்குக் காரணங்கள் தருவதே சிறந்தது. எனவே நான் கிறிஸ்துவை மட்டும் பின்பற்றுவதற்குரிய காரணங்களாவன :—(1) கடவுள் எப்படிப்பட்டவர் என்பதைக் கிறிஸ்து ஒருவரே மிகத் தெளிவாய்க் காட்டியுளர். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, சருவஉலகும் இரட்சிக்கப்படவேண்டும்

என்றும், அவர் எல்லாருக்கும் பரமதந்தையென்றும், நன்மையே அவரது சித்தம் என்றும் தம் வாழ்க்கையிலேயே காட்டிக் கடவுளின் அன்பு பிறருக்காகச் சாதல் என்பதை மெய்ப்பிக்கத் தாமே சிலுவையில் உயிர்த்தியாகம் செய்தார். என்னைக்கண்டவன் கடவுளைக் கண்டவன் என்றார். கிறிஸ்துவை அறிய அறியக் கடவுளை அறிகிறேன். (2) மனிதன் மதிப்பையும், அவனுக்குள்ளிருக்கும் சாத்தியங்களையும் கிறிஸ்து அதிகரித்திருக்கிறார். (3) பாவிகள், கீழ்மக்கள் என்று சமூகத்தால் தள்ளப்பட்ட மக்கட்கு அவரே அடைக்கலம் அளித்து அவர்களை உயர்த்தியுளர். (4) ஒப்புயர்வற்ற சன்மார்க்கக் குறிக்கோள்களைக் கிறிஸ்து உலகுக்களித்துளர். பூரண தூய்மை, பூரண உண்மை, பூரணப் பெருந்தன்மை, பூரண அன்பு, கடவுள் சித்தத்திற்குள் பூரணமாய்ச் சரண்புகுதல் ஆகிய குணசீலங்களைத்தாமே செய்து காட்டியுளர். (5) பிறருக்காகத் துன்புறல் என்ற உயரிய, வன்மைமிக்க சத்தியத்தை நிலைநாட்டியுளர். சிலுவையில் தாமே அச்சத்தியத்தை நடைமுறையில் உறுதி செய்துளர். (6) உலகிற்கு அவரே உன்னத வழிகாட்டி என்று அவரும், அவரது மெய்த்தொண்டரும் உறுதிப்படுத்தியுளர். இவை ஒவ்வொன்றிற்கும் எண்ணற்ற எடுத்துக் காட்டுகள் உண்டு. ஆயினும் அவை "நான் ஏன் கிறிஸ்தவன்" என்ற நூலில் விரித்துக் கூறப்படும்.

(9) ஒவ்வொரு ஜெபமுடிவிலும் "இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே வேண்டிக்கொள்ளுகிறோம்" என்று சொல்வதேன்? அவர் கடவுள் அல்லவா? பின் ஏன் அவர் மூலம் ஜெபிக்கவேண்டும்?

இவ்வினா ஒரு இந்து மாணவ ஆசிரியரால் கேட்கப்பட்டிருக்கிறது. வினாவின் முதற்பகுதிக்கு விடை எளிது. யோவான் 15 : 16ல் "நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்" என்று இயேசுநாதரே கட்டளையிட்டிருப்பதாலேயே எல்லா ஜெபத்தின் இறுதியிலும் "இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே கேட்டுக் கொள்ளுகிறோம்" என்று ஜெபிக்கிறோம். (யோவான் 14 : 14, 16 : 23 காண்க)

கிறிஸ்து திரித்துவத்தில் ஒருவர். பிதா, குமாரன், பரிசுத்தாவி என்பதே திரித்துவம். திரித்துவம் என்பது யாது என்றறிய மகாகனம் கியுபிகின் அத்தியட்சர் அவர்கள் இயற்றிய பாவமும் இரட்சிப்பும் என்ற நூலில் 43ம் 44ம் பக்கங்களைக் காண்க.

---

# இயேசுவின் ஜெபப்பள்ளி

## இருபத்துமூன்றும் பாடம்

## ' பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுக்கும்படியாகக் கனி கொடுங்கள்.

அல்லது

## ஜெப உலகில் வல்லமை காண வழி நடத்துவது கீழ்ப்படிதலே.

*' நீங்கள் என்னைத் தெரிந்தெடுக்கவில்லை, நான் உங்களைத் தெரிந்தெடுத்தேன்; நீங்கள் என் நாமத்தில் பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுக்கும்படியாக நீங்கள் போய்க் கனி கொடுக்கவும், உங்கள் கனி நிலைத்திருக்கவும், நான் உங்களை ஏற்படுத்தினேன்.' யோவான் 15 : 16.*

*" நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் வல்லமையுள்ளது ". யாக்கோபு 5 : 16.*

பிதாவிடத்தில் கேட்டுக் கொள்வது எதுவோ அது எப்படிப்பட்டவருக்கு அருளப்படும் என்பது இங்கு மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது. ' நான் உங்களைத் தெரிந்தெடுத்து, நீங்கள் போய்க் கனி கொடுக்கவும், உங்கள் கனி நிலைத்திருக்கவும், உங்களை ஏற்படுத்தினேன்-என்று ஆண்டவர் கூறுகிறார். அத்துடன், ' கனி கொடுக்கிறவர்கள், என் நாமத்தில் பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுக்கும்படியாக ' என்றும் கூறுகிறார். இவை ' நீங்கள் என்னில் நிலைத்திருந்தால் ' என்பதன் விளக்கமேயாம் அவரில் நிலைத்திருப்பதன் குறிக்கோள் ' கனி கொடுத்தலும்,' ' அதிகக் கனிகொடுத்தலுமே.' இவ்விதம் செய்வதே கடவுளை மகிமைப்படுத்துவதும், கிறிஸ்துவின் சீஷத்துவத்துக்கு அறிகுறியாயிருப்பதுமாகும். எவரிடத்தில் மெய்யான நிலைத்திருத்தல் காணப்படுகிறதோ, அவரிடத்தில்தான் கனிகளும் பெருகும். நாம் கேட்பது எதுவாயினும் அதைப் பெற்றுக்கொள்வதற்கு இதுவே யோக்கியதாம்சமுமாகும். நாம் அழைக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுமாறு, அவரிடம் நாம் முற்றும் சரண் புகுதலே வல்லமையுள்ள ஜெபத்திற்குரிய நிபந்தனை. இதுவே கிறிஸ்து, ஜெபத்திற்கு வாக்களித்த எல்லையற்ற ஆசிகட்குத் திறவுகோல்.

இப்படிப்பட்ட போதனை ' இலவச ஈவு ' என்ற தத்துவத்திற்கு முரண்பட்டது என்று கருதும் கிறிஸ்தவர்களும் உண்டு. ' இலவச ஈவு' என்பதையும், மற்ற வசனங்களையும் சரியாய்ப் புரிந்து கொண்டவர்கட்கு இது முரண்பாடன்று. உதாரணமாக 1 யோவான் 3 : 22 ஐ எடுத்துக் கொள்வோம். " அவர் கற்பனைகளை நாம் கைக்கொண்டு, அவர் பார்வையில் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால், நாம் வேண்டிக கொள்ளுகிறதெதுவோ, அதை அவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்கிறோம்." அல்லது அடிக்கடி எடுத்துக் கூறும் யாக்கோபின் வார்த்தை " நீதிமான் செய்யும்

ஊக்கமான வேண்டுதல் மிகவும் வல்லமை உள்ளது" என்பதை எடுத்துக் கொண்டாலும், இலவச ஈவுக்கு முரண்பட்டதன்று பரிசுத்தாவியின் வரையறைப்படி "நீதியைச் செய்கிறவன், அவர் நீதியுள்ளவராயிருக்கிறது போலத்தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்" (யோவான் 3:7) என்பதற்கிசைந்தவனே நீதிமான். சங்கீதங்களில் பல இடங்களில் உண்மை, நீதி ஆகியவைகளே வற்புறுத்தப்படுகின்றன. 'கர்த்தர் என் நீதிக்குத்தக்கதாக எனக்குப் பதிலளித்தார்; என் கைகளின் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார்" ............அவர் முன்பாக நான் மனவுண்மையாயிருந்து, என் துர்க்குணத்துக்கு என்னை விலக்கிக்காத்துக் கொண்டேன். ஆகையால் கர்த்தர் என் நீதிக்கும், தம்முடைய கண்களுக்கு முன்னிருக்கிற என்கைகளின் சுத்தத்திற்கும் தக்கதாக எனக்குப் பலனளித்தார்". சங். 18:20-26. மேலும் சங். 7:3—5, 15:1, 2, 17:3, 6, 26:1—6, 119:121, 153 முதலிய பகுதிகளையும் காண்க. இவற்றைப் புதிய ஏற்பாட்டின் ஆவியோடு ஆராய்வோமானால் அவையாவும், 'நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்" (யோவான் 15:10 'நான் உங்களுக்குக் கற்பிக்கிறயாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்' (யோவான் 15:14) "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத் தக்கதாக நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் உங்களை ஏற்படுத்தினேன்" என்பதில் தெளிவாகின்றன.

இயேசு கிறிஸ்து இங்கு கற்பிக்கும் ஆவிக்குள் பிரவேசிப்போமாக. ஜெபத்திலும் விசுவாசத்திலும் பெறுகிற கிறிஸ்தவ அனுபவத்தைப்பற்றி அதிகம் எதிர் பார்ப்பதில் ஒரு அபாயம் உண்டு. ஆசியைப் பெறுவதற்குக் கீழ்ப்படிதல் தேவை என்று வேதம் போதிக்கிறது. எனவே, கடவுளுடைய ஆளுகைக்கும், மகிமைக்கும், சித்தத்திற்கும், பிரியத்திற்கும் முற்றும் நம்மைக் கீழ்ப்படுத்துவதே முதலாவது தேவை. அவர் தயவை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதன்று. ஆனால், அவரது மகிமைக்கும், பிரியத்திற்கும் பாத்திரராவது எப்படி என்பதே முக்கியம். அவரிடம் முற்றும் சரண் புகுதலும், அவரது திருவுள்ளச் சித்தத்திற்கிசையச் சேவை செய்வதுமே மிகவும் தேவை. எவரொருவர் கீழ்ப்படிதலுக்கும் சேவைக்கும் முதலிடம் கொடுக்கின்றாரோ அவருக்கே சகல உன்னதமான ஆசிகளும் கிடைக்கும்.

நிலைத்திருப்பதைப்பற்றி இங்குமட்டுமன்று. இதற்கு முந்திய அதிகாரத்திலும் திரித்துவத்தில் ஒருவரான சத்திய ஆவி நம்மில் தங்குவதைப்பற்றிக் கூறுகிறார். "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவான் 14:15) "சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை பிதா உங்களுக்குத் தந்தருளுவார்" (14:16) பிறகு 14:21 ல், "என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்" மேலும் யோவான் 14:23ல் வாக்குத்தத்தங்களுள் எல்லாம் மாபெரும்

உன்னத வாக்குத்தத்தம் அருளப்படுகிறது. "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், பிதாவும் நானும் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" என்கிறார் பரிசுத்தாவியும், சுதனும் பிதாவும் வந்து நம்மில் தங்குவதற்கு வழி வகுப்பது கீழ்ப்படிதலே. கீழ்ப்படிதலும் விசுவாசமும் ஒரே செயலின் இரு கூறுகள். கடவுளுக்கும் அவரது சித்தத்திற்கும் நம்மை ஒப்புக்கொடுப்பதே அந்த ஒரே ஒரு செயல். விசுவாசம் கீழ்ப்படிதலைப் பலப்படுத்துகிறது. கீழ்பபடிதல் விசுவாசத்தைப் பலப்படுத்துகிறது. கிரியைகள் மூலம் விசுவாசம் பூரணப்படுகிறது. நாம் விசுவாசம் வைக்க முயல்வதனைத்தும் வீணாவதற்கு, நம்மைக் கடவுளுக்கு முற்றும் ஒப்புக்கொடாததே காரணம். கடவுளுடைய சித்தத்திற்குத் தனது சித்தத்தை ஒப்பக்கொடுக்கிறவனே கடவுள் வாக்குச் செய்த எல்லா ஆசிகளையும் உரிமையோடு கேட்க முடியும்.

இதனை ஜெபப்பள்ளியில் பயன் படுத்துவது எளிது. ஆனால் பயபக்திக்குரியது. 'நான் உங்களைத் தெரிந்தெடுத்தேன். ......ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்......நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார். எனக்கும் சீஷராயிருப்பீர்கள் (யோவான 15: 5, 8) இவ்விதம் நீங்கள் செய்தால், என் நாமத்தினாலே கேட்டுக் கொள்வது எதுவோ, பிதா உங்களுக்குக் கொடுப்பார்" என்று ஆண்டவர் கூறுகிறார். கனிக் கொடுக்கத்தகக மிகுந்த கிருபையைப் பெறுவதற்காக எத்தனையோ தடவை வல்லமையாக ஜெபிக்க முயன்றும் பலனில்லாது போனதை நாம்அறிவோம். ஆண்டவர் கட்டளையிட்டபடிகளை விட்டுத் தலை கீழாக நாம் நடக்க முயன்றதே இதற்குக் காரணம். எதனையும் சுயதியாகமில்லாமல் சுலபமாய்ச் செய்யுமாறு, ஆறுதலும், மகிழ்ச்சியும் பலமும் முதலில் பெற விரும்பினோம். ஆனால் ஆண்டவர் போதித்தபடிகள் இவையல்ல. நம் வேலை எளிதாயிருந்தாலும் கடினமாயிருந்தாலும் நாம் பலவீனராயிருந்தாலும், பலவான்களாயிருந்தாலும், விசுவாசத்திலும், விசுவாசத்தின் கீழ்ப்படிதலிலும் அவர் கட்டளையிட்டதை நாம் செய்யும்படிக்கே அவர் எதிர்பார்க்கிறார். கனி கொடுப்பதே, வல்லமையுள்ள ஜெபம் செய்ய, நம்மை வழி நடத்தும். கீழ்ப்படிதலே கடவுளை மகிமைப்படுத்துவது. விசுவாசத்திற்குப் பதிலாகக் கீழ்ப்படிதலு மன்று; விசுவாசத்தை நிறைவாக்குவதற்காகக் கீழ்ப்படிதலு மன்று. விசுவாசத்தின் கீழ்ப்படிதலே சகல ஆசிகட்கும் வழி. பரிசுத்தாவியின் ஞானஸ்நானம், (யோவான் 14 : 16) குமாரன் தம்மை நமக்கு வெளிப்படுத்தல் (யோவான் 14 : 21) பிதா நம்மில் வாசம்பண்ணுதல், (யோவான் 14 : 23) கிறிஸ்துவின் அன்பு நம்மில் நிலைத்திருத்தல், (யோவான் 15 : 10) அவரது பரிசுத்த சிநேகத்தின் சிலாக்கியம், (யோவான் 15 : 14) வல்லமையுள்ள ஜெபம் (யோவான் 15 : 16) ஆகிய அனைத்தும் கீழ்ப்படிகிறவருக்கே காத்திருக்கின்றன.

இப்பாடங்களை மனதில் வைப்போமாக, விசுவாசத்தோடு ஜெபிக்க நமக்கு வல்லமையில்லாததற்குக் காரணம் யாது? என்பதை இப்பொழுது தெரிந்து கொண்டோம். இருக்கவேண்டிய விதமாய் நம்வாழ்க்கை இருக்கவில்லை என்றறிந்தோம். உடனடியான கீழ்ப்படிதலும், கனிகொடுப்பதுமே நம்

வாழ்க்கையின் பிரதான நோக்கம் என்பதை மறந்தோம். தம் ஜீவியத்தால் உலகைத் தம் செல்வாக்குக்குட்படுத்த எவர்கள் விரும்புகின்றார்களோ, கடவுள் சித்தத்தை நிறைவேற்ற எவர்கள் விரும்புகின்றார்களோ, அப்படிப் பட்டவர்கள் தாங்களே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டவர்களாகவும், கடவுளைப்பற்றிய அபிமான முடையவர்கள், கடவுளுடைய அதிகாரத்திற் கடங்கினவர்கள் என்பதற்கு இம்மியும் சந்தேகமற்ற தன்மைகள் பொருந்தியவர்களாகவும் இருக்கவேண்டும். கீழ்ப்படிதலும் கனி கொடுத்தலுமே வல்லமையுள்ள ஜெபத்திற்கு வழிநடத்தும் பிரமாணம். இந்த அச்சடையாளம் நம்மில் இம்மியுமில்லை என்பதை நாம் உணர்ந்து வெட்கத்தோடு தலைகுனியும் நிலையில் தான் இருக்கின்றோம். ஆண்டவர் கட்டளையிட்ட படி செய்வோமாக. அவர் நமக்கு எஜமான் என்றுணர்வோமாக. ஆறுதல், சந்தோஷம், ஆசீர்வாதம் ஆகியவற்றிற்குத் தினசரி ஜெபங்களில் முதலிடம் கொடாதிருப்போமாக 'நான் ஆண்டவருக்கடிமை' என்ற கருத்தை முதலாவதாகக் கொள்வோமாக. ஒவ்வொரு நிமிஷத்திலும், ஒவ்வொரு செயலிலும், "நாம் அவருக்குச் சொந்தமானவர்கள், அவர் சரீரமாகிய திருச்சபையில் அங்கங்கள், அவரது சித்தம் யாதென்றறிந்து அதன்படி செய்ய வேண்டியவர்கள்" என்பதை மறவாதிருப்போமாக. "நான் இயேசுவின் வேலைக்காரன். இயேசுவின் அடிமை" என்ற இந்த எண்ணம் நம்மை விட்டு என்றும் அகலாதிருப்பாதாக. "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை ... ..... நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்' (யோவான் 15:15) என்ற இந்த உன்னத சிலாக்கியத்தை நன்றியுடன் ஒப்புக்கொள்வோமாக. "நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" (யோவான் 15:14) என்ற அருள் வாக்கை மனதிற் கொள்வோமாக.

இயேசுவாகிய திராட்சச் செடியில் நாம் கொடிகளாகச் செய்ய வேண்டியது கனி கொடுத்தலே. இதுவே அவர் கற்பனைகளுள் ஒன்று. பிறருக்கு ஆசீர்வாதமாக வாழ்வோமாக. இயேசுவில் காணப்படும் ஒப்பற்ற அன்பிற்கும், ஜீவனுக்கும் நாம் சாக்ஷி பகர்வோமாக. கனி கொடுப்பதற்காகவே இயேசுவால் தெரிந்தெடுக்கப்பட்ட, ஏற்படுத்தப்பட்ட நாம் விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் நம்மை அவருக்கு ஒப்புக் கொடுப்போமாக. கனி கொடுப்பதும், மிகுந்த கனி கொடுப்பதும், அவரில் நிலைத்திருப்பதும் நமக்குச் சாத்தியமானவைகளே. ஏனெனில் நம்மை அவரே தெரிந்தெடுத்தார். கிறிஸ்து வெளிப்படுத்திய கடவுளுக்குக் கீழ்ப்படிகிறவன் எவனோ அவனே, ஆண்டவர் சித்தப்படி சகலத்தையும் தான் செய்வதை மெய்ப்பிக்கிறான் அவனுக்கே அவன் கேட்பது எதுவோ அதனைப் பிதா அருளுவார்.

---

## கி. மு. சங்கப் பொருட்கள்—செப்டெம்பர் 1955.

ஜனத்தின் மத்தியில் இயேசு (பவனி)

செப்டெம்பர் 1. சர்லோமோனிலும் பெரியவர் இங்கிருக்கிறார். மத். 12:35-42

2. இதோ உன் இராஜா வருகிறார் சகரியா 9:9.

3. ஜீவனுள்ளகற்கள் 1 பேதுரு 2 : 1-9
4. ஜனத்தின் நடுவில் இயேசு. (பவனி)
லூக்கா 19 : 28-44

தற்பிரதிஷ்டை " எந்தன் ஜீவன் ஏசுவே " (8) என்சித்தம்.

5. சுயாதீனம் ஏசாயா 1 : 10-20
6. மகிமைப்படல் மாற்கு 10 : 46-52
7. பெலவீனர் மத் 8 : 18-22
8 ஆண்டவருக்கு கீழ்ப்பட்ட வாழ்க்கை யாத். 4 : 12-17
9. பலப்படல் லூக்கா 22 : 39-44
10. நோக்கமுள்ள வாழ்க்கை 2 தீமோ 2. 1-8
11. தற்பிரதிஷ்டை எந்தன் ஜீவன் என் சித்தம்
சங். 143 : 1 12

மிதக்கும் கி. மு. சமுத்திரத்தின் செய்திகள்.

12. சமுத்திரம் கடவுளின் சிருஷ்டி. சங். 95 : 3-7
13 கடவுள் அதன் நிர்வாகி. யோபு. 38 : 8 சங்.89 : 8-9
14. அதின் அதிசயம் கடவுள் வல்லமை ஞானத்தைக் காட்டுகிறது. சங். 104 : 24-25
15. துன்மார்க்கர் கொந்தளிக்கும் கடல்
ஏசாயா 57 : 20-21
16. அதின் ஆழம் கடவுளின் கிருபையைக்குறிக்கும்
மீகா. 7 : 18-19
17. அதின் விஸ்தாரம் சுவிசேஷம் பரவுதலைக் குறிக்கும்.
ஏசாயா 11 : 9
18. கடலிலிருந்து கி.மு. செய்திகள். சங். 27 : 14-20

கிறிஸ்தவ ரூபகாரங்கள் (1) கடவுளை நம்புவது ஏன்?

19. இயற்கையில் கடவுள் வெளிப்படுத்தல்.
ரோமர். 1 : 19-25
20. மனச்சாட்சியில் ,, ,, ,, 2 : 1-16
21. வேதத்தில் ,, ,, எபி. 1 : 1-14
22. இயேசுக்கிறிஸ்துவில் ,, மத். 11 : 25-30
23. இயேசுக்கிறிஸ்துவில் ,, யோவான். 1 : 14-18
24. இயேசுக்கிறிஸ்துவின் முகத்தில் கடவுளைக் காணலாம். 2 கொரி. 4 : 1-7
25. கிறிஸ்தவ ரூபகாரம் (1) கடவுளை நம்புவது ஏன்?
எபி. 11 : 1-6

பெனின்சில்வேனியா செய்தி

26. கிரயத்திற்கு கொள்ளப்பட்டோம். உபா. 32 : 1-8
27. விக்ரக வணக்கத்தார். சங். 115 : 1-8.
28. உலர்ந்த எலும்புகள் பிழைக்குமா? எசே. 37 : 1-14

29. "என்னை நேசிக்கிறாயா?" யோவான். 21 : 15-19

30. உபத்ரவம் சகிக்க ஆயத்தமா? 1 கொரி. 4 : 7-13

---

(முன்தொடர்ச்சி)

## கடவுள் உண்டா!

அல்லது

## தெய்வ நம்பிக்கை

எழுதியவர் :

திரு. வி. ஜெயராஜ், B.A., L.Th.,

மதுரை-இராமநாதபுர அத்தியட்சாதீனக் கிறிஸ்தவ இலக்கியத்

தனி அலுவலாளர், பசுமலை.

சுருங்கச் சொன்னால், மொத்தப்பால் வீதி மண்டலங்கள் பத்தாயிரங் கோடி. ஒவ்வொரு பால் வீதி மண்டலத்திலும் பத்தாயிரம் கோடி நட்சத்திரங்கள். இன்றையத் தொலை நோக்கிகள் இலட்சத்தில் ஒரு பங்கு பிரபஞ்சத்தையே காட்டுகின்றன. மிகத் தூரத்திலுள்ள பால் வீதி மண்டலங்களுள் ஒன்று செக்கண்டு ஒன்றுக்கு 15000 மைல் வேகத்திலும் மற்றொன்று 24300 மைல வேகத்திலும் தூரமாய்ப் போய்க் கொண்டேயிருக்கின்றன. (Expanding universe) இந்நிலையில் நம் உலகும் நாமும் எம்மாத்திரம்?

உண்மையான பௌதிக உலகும் ஐம்புலன்களாலறியப்படும் பொறிக் காட்சி (perceptual) உலகும் ஒன்றல்ல ஐம்புலன்கள் மூலம் விஞ்ஞானம் காணும் உலகு இறைவன் படைத்த மெய்யுலகன்று. அது அவ்வுலகின் தோற்றமே (appearance only). உற்றுநோக்கும் கருவி வேறுபட வேறுபட, உற்று நோக்கப்படும் பொருளும் வேறுபட்டுக் கொண்டேயிருக்கிறது. உதாரணமாக ஒரு கத்தியின் விளிம்பு வெறுங்கண்ணுக்கு ஒரு தொடர்ச்சியான நேர் கோடாய்த் தோன்றுகிறது. உருப்பெருக்கியில் (magnifying glass) அது வளைவாய்த் தோன்றுகிறது. வன்மைமிக்க பூதக்கண்ணாடியில் அது உடைந்த சிறு சிறு துண்டுகளாய்த் தோன்றுகிறது. இரசாயன அளவையில் (chemical scale) அது, கரி இரும்பு ஆகியவற்றின் சேர்க்கையாய்த் தோன்றுகிறது. உப அணு அளவையில் (sub-atomic scale), அது செக்கண்டு ஒன்றுக்குப் பல்லாயிரக்கணக்கான மைல் வேகத்தில் நிரந்தரமாய்ச் சலனித்துக் கொண்டிருக்கும் எலக்ட்ரான்களாகவும், புரோட்டான்களாகவும் தோன்றுகிறது. எனவே நாம் காணும் உலகு மெய்யுலகன்று. (not absolute) அது நம் ஐம்புலன்களும், மூளையும் உருவாக்கும் சார்பு உலகு (relative). பார்ப்பது

கண்ணன்று. மூளையே பார்க்கிறது. சகல பிம்பங்களும் தலைகீழாகவே கண் திரையில் படுகின்றன. பார்வை நரம்புகள் மூலம் மூளைமையத்திற்குச் சென்று அங்கேதான் சரியான பிம்பங்கள் ஆகின்றன. இது எப்படி ஏற்படுகிறது என்பதற்கு விஞ்ஞானத்தில் இதுகாறும் விளக்கமில்லை. ஐம்புலன்களையும் நம்பமுடியாது. ஏனெனில், பார்வை மயக்கம் கேள்வி மயக்கம், ஊறு மயக்கம், நாற்ற மயக்கம், சுவை மயக்கம், என்ற குறைபாடுகள் நம்புலன்கட்குண்டு. இவ்வாறு கூறுவதால் யாம் மாயாவாதத்தை (idealism) ஒப்புகிறோம் என்றர்த்தமன்று.

## படைப்பின் நுட்பம்

**கண்ட உலகு கடுகத்தனை, காணா உலகோ கடலத்தனை.** இப்பிரபஞ்சத்தில் நாம் கேளா ஒலிகள் உண்டு. காணா ஒளிகள் உண்டு. காணா உயிர்கள் உண்டு. நள்ளிரவில் நாம் கேளா ஒலிகளை விலங்கினங்கள் கேட்கின்றன. அல்ட்ரா வயலெற் கதிர்களை நாம் காண்கிலோம். எறும்புகள் காண்கின்றன. நாம் உணராத காற்றழுத்த வேறுபாடுகளைப் பலபூச்சிகள் உணர்கின்றன. மின்சார அலைகள் நமக்குப் புலப்படா. நூறிலொரு அங்குல நீளமுள்ள உயிரிக்கும் (organism) மூளையுண்டு, தசைகளுண்டு, உணவுக்குழாயுண்டு, சுவாசப்பையுண்டு, இருதயமுண்டு. இத்தகைய சிற்ப நுட்பத்தைக் கற்பனை செய்வதும் அரிது. மண்கலங்களை ஊடுருவிச் செல்லும் நுண்ணிய உயிரிகளும் உள. ஆயினும் அவை மலை போன்ற "அரக்கரையும்" இலைபோன்று உதிரச்செய்கின்றன. ஐயாயிரத்தில் ஒரு அங்குல நீளமுள்ள நுண்கிருமி ஒவ்வொரு அரை மணி நேரத்திலும், தன்னைத்தானே இரட்டித்து, ஐந்து நாட்கட்குள் சமுத்திர முழுவதையும் ஒரு மைல் ஆழம்வரை தன் இனத்தால் நிரப்புகிறது என்றால் இறைவன் படைப்பில் காணப்படும் நுண்ணறிவு எத்தகையது பாருங்கள்! சாதாரண தட்ப வெப்பநிலையில் காற்றின் மூலக்கூறுகள் (molecules) ஒரு செக்கண்டுக்கு நூறுகோடி தடவைகள் ஒன்றையொன்று மோதுகின்றன. ஒரு அவுன்ஸ் நீரில் $1000000 \times 1000000 \times 1000000 \times 1000000$ மூலக்கூறுகள் உள.

இருதயத்துடிப்பையறிவோம், ஆனால் தசைகளில் நிகழ்வனவற்றைத் தெரியோம். உடலுறுப்புக்கள் ஒன்றுபட்டுழைக்க உதவும் ஹார்மோன்கள், தம்கடனை எவ்வாறு செய்கின்றன என்று வன்மைமிக்க பூதக் கண்ணாடிகளும் அறியா. சின்ன அம்மைபோன்றவற்றிற்குக் காரணமான நுண்கிருமிகளை நேர்முகமாக இதுவரை எவரும் கண்டிலர். $1000000 \times 1000000$ நீர் வாயு மூலக்கூறுகளின் பிண்டம் (mass) 3 கிராம்களே. சடப்பொருள் (matter) என்ற சொல்லுக்கே இனிப்பொருளில்லை. ஏனெனில், இப்பிரபஞ்சத்தை உருவாக்குவன எலெக்ட்ரான்களும் புரோட்டான்களுமே. நீர்வாயு அணுவின் எலெக்ட்ரான், செக்கண்டு ஒன்றுக்கு 1400 மைல் வேகத்தில் புரோட்டானைச் சுற்றுகிறது. பத்து இலட்சத்தில் ஒரு செக்கண்டிற்குள், அவ்வெலெக்ட்ரான் 700 கோடி தடவைகள் தன் அயனத்தை (orbit)ச் சுற்றி வருகிறது. எனவே நாம் கண்ட உலகு தினையத்தனை காணா உலகோ பனையத்தனை. நம் அற்ப அறிவைக்கொண்டு இந்த உலகின் தன்மை, நோக்கம், முடிவு ஆகியவற்றைப் பற்றித் தவறான முடிவுகள் செய்யாதபடி விஞ்ஞானம் எச்சரிக்கிறது.

## பரிணாமம் அல்லது உள்ளது சிறத்தல்

இனிப் பரிணாமத்தின் மூலம் இவ்வுலகின் தன்மை, நோக்கம், முடிவு ஆகியவைபற்றி நாம் அறிவது யாதென்றாராய்வோம். இப்பிரபஞ்சம் பல கோடி ஆண்டுகளாகப் பரிணமித்து வந்திருக்கிறது என்பர் விஞ்ஞானிகள் *கார்னற் கிளாவியஸ் விதிக்குட்படாத எலெக்ட்ரான்களும், புரோட்டான்களும் முதலில் தோன்றின. அதன்பின் அணுக்களும் மூலக்கூறுகளும் தோன்றின. பிறகு கார்னற் கிளாவியஸ் விதிக்குட்பட்ட அஃறிணைப் பொருட்கள் தோன்றின. அதன்பின் உயிர்கள் தோன்றின. இனி நடக்கவிருப்பவை சன்மார்க்கப் பரிணாமமும் ஆத்மீகப் பரிணாமமுமேயாம். பரிணாமம் அன்றுதொட்டு இன்றுமட்டும் நடந்து வருகிறது என்ற விஞ்ஞான உண்மைக்கு, "என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்துவருகிறார், நானும் கிரியை செய்து வருகிறேன்" (யோவா. 5:17) என்ற ஆண்டவர் பொன்வாக்கு அரண்செய்கிறது. பரிணாமம் இன்னும் நடக்கவிருக்கிறது என்பதை, "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" என்ற அமுத மொழியும் (யோவா 16:13) "ஆவியின் முதற் பலன்களைப் பெற்றிருக்கிற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்" (உரோ. 8:23) என்ற பவுலடியார் வாக்கும் மெய்ப்பிக்கின்றன. பரிணாம உலகின் தன்மையை நன்கறிந்தவர் மேலே கண்ட மாபெருமறுப்பினைக் கூறார்.

**இப்பரிணாம நாடகம் ஒரு முற்றுப்பெறு அசையும் படம்போன்றது.** பரிணாமத்தில் பல பகுதிகள் அழிந்துபோயின. சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டுள. இப்போது நடைபெறும் பரிணாமப் பகுதிகளே நமக்குத் தெரிகின்றன. இவையனைத்தையும் இணைத்தே பரிணாமத்தின் முழுப்போக்கையும் காணவேண்டும். ஒரு அசையும் படத்தை புரஜெக்டரில் வைத்து ஓடச்செய்து பார்த்தால் அதன் அமைப்பு, தன்மை, நோக்கம், முடிவு யாவும் தெரியும். ஆனால் அதிலுள்ள படங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாராய்ந்தால், சில விவரங்கள் தெளிவாய்த் தெரியுமே தவிர முழுப் படத்தின் தன்மையும், நோக்கமும், முடிவும் தெரியா. அதுபோலவே இன்று நடக்கும் பரிணாமப்பகுதிகளை மட்டும் வைத்துக்கொண்டு தனித்தனியாக ஆராய்ந்தால் அவற்றின் குறைவு நிறைவு மிகப் பெரிதாகவே தோன்றும்.

**ஐந்திலொரு அங்குல உயரமுள்ள "உலகில்" வாழும் உயிரியின் மனப்பான்மையோடு நம் உலகை ஆராய்வது உலகைப்பற்றித் தவறான கருத்துக் கொள்ள ஏதுவாகும்.** ஒரு யானையின் தோல் மடிப்பிற்குள் வாழும் ஒரு உயிரி $\frac{1}{5}$ அங்குல உயரமுள்ள பள்ளத்தாக்காகிய உலகில் வாழ்கிறது. அதன் பிரபஞ்சம் யானை. அவ்வுயிரி அதன் "உலகை"ப்பற்றிக்கொள்ளும் கருத்து, நாம் நம் உலகைப்பற்றிக்கொள்ளும் கருத்திலும் வேறுபட்டது.

---

* An isolated material system can never pass twice identically through the same state Every successive state entails a definitive decrease in its available energy. Hence its irreversibility. This is also called the second law of thermodynamics.

ஏனெனில் அதற்கு $\frac{1}{8}$ அங்குலம், நமக்கு 6000 அல்லது 7000 அடிக்குச் சமம். யானை குளிக்கையில், அவ்வுயிரி நீரில் வீழ்ந்தால், அவ்வுயிரி தனக் கேற்பட்ட விபத்திற்கு வேறு காரணம் கூறுமானால், நாம் அதைப்பற்றி வியப்புறத் தேவையில்லை. ஆனால் நாம் அத்தகைய மனப்பான்மையோடு நம் பிரபஞ்சத்தைப்பற்றி முடிவுகூறுவது பொருந்துமா? 24 மணிகள் கொண்ட ஒரு நாள் அதற்கு ஒரு நூற்றாண்டு அல்லது மூன்று தலைமுறை கள் H. H. நியூமேன் கூறுகிறபடி பரிணாம நாடகத்தில் நம் பகுதி ஒரே ஒரு காட்சிதான். இந்த ஒரு காட்சியில் காண்பவற்றை வைத்து முழுப் பரிணாம நாடகத்தையும் முடிவு செய்தல் பகுத்தறிவன்று.

**பகுத்தறிவிருந்தும் பகுத்தறிவற்றவர்களாயிருப்பதைப் போன்ற பகுத்தறி வின்மை வேறு ஏதுமில்லை.** பரிணாம நிகழ்ச்சிகளின் வேகத்தையோ மெது வையோ வைத்துப் பரிணாமத்தை முடிவுசெய்தல் தவறு. ஒரு உருக்குத் துண்டு 5 அடி வேகத்தில் விழுந்தால் அதனைக் கையால் தடுத்து விடலாம். அது 2500 அடிவேகத்தில் விழுந்தால் ஒரு அங்குலக் கனமுள்ள இரும்புத் தகட்டையும் ஊடுருவிப்போம். முன்னையதை விளையாட்டென்கிறோம். பின்னையதை விபத்து என்கிறோம். மனித பார்வையில் வேகமாய் நடை பெறுவதாகத் தோன்றுவன, அன்று பிறந்து அன்றே அழியும் ஈசல் போன்ற உயிரியின் பார்வையில், மெதுவாய் நடைபெறுவதாகவே தோன் றும். ஆயிரம் கோடி ஆண்டுகள் ஆயுளுடைய ஒரு கற்பனை மனிதனுக்குப் பரிணாமம் வேகமாய் நடைபெறுவதாகவே தோன்றும். ஆனால் நித்திய வஸ்துவான கடவுளுக்கு அது உடனடியாக நடைபெறுவ்தாயிருக்கும். ஒரு நிகழ்ச்சி சில நிமிடங்களிலோ சில மணிகளிலோ நடவாமல் 10000 ஆண்டுகளாக நடந்து வந்தால், 50 ஆண்டு ஆயுள் படைத்த ஒருவனுக்கு அது நடவாததுபோலவே தோன்றும். மலர்கள் முழு மலர்ச்சியடையும் பல நிலைகளையும் வெறுங்கண்ணால் காண்பதரிது. ஆனால் அவற்றை அசையும் படமூலம் காண்கிறோம் இது மெதுவான நிகழ்ச்சி. ஒரு துப்பாக்கிக்குண்டு வெடித்துப் பறப்பதன் பல நிலைகளை வெறுங்கண்ணால் காண்பதரிது. ஆனால் ஒரு செக்கண்டுக்கு ஆயிரத்திற்கு மேலான படங் களை எடுக்கும் கருவியால் அதன் பல நிலைகளையும் காண்கிறோம். இது வேகமாய் நடைபெறும் நிகழ்ச்சி. எனவே இறைவன் படைப்பில் மெது வாய் நடப்பனவுமுள. வேகமாய் நடப்பனவுமுள. குறுகிய ஆயுள் படைத்த நாம் அவற்றைப்பற்றித் தவறான முடிவுகள் கூறுவது பகுத்தறி வாகாது.

### (ஆ) பிரபஞ்சம் "அணுக்களின் தற்செயலான சேர்க்கை" (A fortuitous concourse of atoms) யா? அல்லது கடவுள் படைப்பா?

"**ஆதியாகமமும் விஞ்ஞானமும்**" என்ற நூலில் இப்பிரச்சினை விரிவாய் விளக்கப்படும். ஆயினும் தலை சிறந்த விஞ்ஞானியாகிய A. **கிரெஸி மாரிஸன்** என்ற பெரியார் இதுபற்றிக் கூறும் சில உயரிய கருத்துக்களை இங்கு தீட்டுகின்றோம். இன்று, மனிதன் இயற்கையோடு அனுசரணை (adjustment) செய்யவேண்டியவனாயிருக்கிறான். ஆனால் மனிதனுக்காகவேண்டி இயற்கை எவ்வாறு அனுசரணைசெய்தது என்பதே பரிணாமம். அதில்

நம்மைப் பிரமிக்கச் செய்யும் சிலவற்றைமட்டும் பார்ப்போம். எல்லாக் கிரகங்களுள்ளும் பூமியே நாம் வாழத்தக்கது.

மணிக்கு ஆயிரமைல் வேகத்தில் பூமி தன்னைத்தானே 24 மணிக்கு ஒரு தடவை சுற்றுகிறது. இவ்வாறில்லாமல் மணிக்கு நூறுமைல் வீதம் சுற்றினால், பகல் 120 மணியாகும். இரவு 120 மணி ஆகும். கோடை வெப்பம் தாவர உலகை அழிக்கும். இரவின் நெடுநேரப்பனி மூளைகளைக் கருகச் செய்யும். 12000° (F) வெப்பங்கொண்ட சூரியனின் நிதியாக்கினியால் எரிந்து போகாதபடிக்கு எவ்வளவு தூரத்திலிருக்க வேண்டுமோ அவ்வளவு தூரத்தில் பூமி இருக்கிறது. பூமியில் சராசரி வெப்பத்தில் 50° அதிகப்பட்டால் மனிதன் உட்படச் சகல உயிரும் பயிரும் எரிந்து போம். 'முடிசார்ந்த மன்னரும் பிடி சாம்பராவர்'.

ஒரு செக்கண்டுக்கு 18 மைல் வீதம் பூமி சூரியனைச் சுற்றுகிறது. இப்படியில்லாமல், ஒரு செக்கண்டுக்குப் பூமி 6 மைல் அல்லது 40 மைல் வீதம் சூரியனைச் சுற்றினால், நாம் சூரியனுக்கு மிகச் சமீபத்திலிருப்போம். அல்லது மிகத் தூரத்திலிருப்போம் சூரியனின் ஒளிவீச்சைவிட நட்சத்திரங்களின் ஒளிவீச்சு பத்தாயிரமடங்கதிகம். சூரியன் தன் கதிர்வீச்சில் பாதியைமட்டும் தந்தால், நாம் உறைந்து போவோம். சூரியன், தன் கதிர்வீச்சு முழுவதையும் தந்தால், நாம் எரிந்துபோவோம். நாம் உயிர் வாழ எவ்வளவு தூரத்தில் சூரியன் இருக்கவேண்டுமோ, அவ்வளவு தூரத்தில் சூரியன் சரியாய் வைக்கப்பட்டுள்ளது. பூமி 23 டிகிரி சாய்ந்திருக்கிறது. இதன் விளைவே பருவங்கள். இப்படி இவ்வளவிற்கு சாய்ந்திராவிடில், துருவங்கள் நித்திய சந்தியாகாலத்திலிருக்கும். சமுத்திரத்தின் நீராவி தெற்கேயும் வடக்கேயும் செல்லும். பனிக் கண்டங்களை உண்டு பண்ணும். பூமையப் பகுதி பாலைவனமாகவும் பனிவனமாகவும் மாறும். துருவங்கள் பனிக்கட்டியின் பளுவால் தாழ்த்தப்படும். பூமையப் பகுதி வீங்கும். சமுத்திரம் தாழும். மழை குறையும். உலகே அழியும். புதிய தரைப் பகுதிகள் தோன்றும்.

நிலவு 240000 மைல் தூரத்திலிருக்கிறது. தினசரி இரு ஏற்றவற்றங்கள் ஏற்படுகின்றன நிலவின் கவர்ச்சியால். பூமியின் மேற்பரப்பு தினசரி இருமுறை இக்கவர்ச்சியால் பல அங்குலங்கள் வளைகிறது. நிலவு இப்போதுள்ள தூரத்தில் இல்லாது அதனைப்போல் இரண்டத்தனை தூரத்திலிருந்தால் பூமியின் தாழ்வான பாகங்கள் நீரால் நிரம்பும். மலைகள் அரிக்கப்படும். கண்டங்கள் தோன்றியிரா. பூமி உடையும் ஏற்றவற்றங்கள் தினசரி புயல்களை உண்டாக்கும். பூமியில் ஒன்றரை மைல் ஆழத்திற்குத் தண்ணீர் நிற்கும். உயிர்கள் வாழா. இவ்வேற்றவற்றங்களே சில விதிகட்குட்பட்டு, இப்போதுள்ள தூரத்திற்கு நிலவைத் தள்ளிவைத்தன. பூமியையும் 24 மணிக்குள் தன்னைத்தானே மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றச் செய்தன.

பூமி சூரியனிலிருந்து பிரிந்தபோது 12000° வெப்பமுடையதாயிருந்து பல கோடி ஆண்டுகட்குப்பின் இன்றைய நிலையை அடைந்தது. 4000° (F) வெப்பம் வரும்வரை உயிர் வாயுவும் நீர் வாயுவும் ஒன்றோடொன்று

சேரா. இந்நிலையில்தான் ஆகாயத்திலுள்ள மூலப்பொருட்கள் நீராக மாறிச் சமுத்திரங்கள் ஏற்படும். அம்மூலப் பொருட்கள் வாயுக்களாயிருந்தன. பூமியின் மேர்பரப்பு 10 அடி கனமாயிருந்தால் உயிர் வாயு இராது. உயிரும் இராது. சமுத்திரஙகள் இன்னும் அதிக ஆழமாயிருந்தால், காரபன்டையாக்சைடும் உயிர்வாயுவும் சமுததிரத்தால் கிரஹிக்கப்பட்டிருக்கும். ஆகாயம் இப்போதுள்ளதைவிட இன்னும் மெல்லியதாயிருந்தால் தினசரி இலட்சக் கணக்கில் ஏற்படும் எரிகொள்ளிகளால் உலகம் எரிக்கப்பட்டிருக்கும். உயிர் வாயு 21 சதவிகிதத்திலிராது 50 சதவிகிதத்தில் இருந்தால், ஓரிடத்தில் இடிவிழுந்தாலும் உலகே எரியும். 78 சதவிகிதத்திலுள்ள நைட்ரோஜன் உயிர்வாழத் தேவையான அளவிற்கு உயிர்வாயுவின் சக்தியைக் குறைக்கிறது. மனிதன் 3000 பவுண்டு காற்றழுத்தத்தைச் சுமக்கிறான். அவன் நசுங்கிப் போகாது காப்பது அவனுககுள்ளிருக்கும் காற்றே. விமானிகள் அளவுக்குமிஞ்சி உயரப் பறந்தால் காற்றழுத்தக் குறைவால் காது வழி இரத்தம் கொட்டுகிறது. உயிரணுக்களிலுள்ள புரோட்டோபிளாஸம் உருவாக நைட்ரோஜன் தேவை உயிர் வாயு இல்லாவிடில் தீ இராது. பூமியின் மேற்பரப்புக்குமேல் சிலமைல் வரைதான் ஆகாயம் இருக்கிறது. அதற்கப்பால் கற்பனைக்கெட்டாத தட்பம் இருக்கிறது. வானில் பூஜ்ஜியத்திற்குக் கீழே 70 டிகிரிகள் தட்பவெப்ப நிலை இறங்குவதாகவும், ஆகாசத்திற்கப்பால் பூஜ்ஜியத்திற்குக் கீழே 459 டிகிரி இறங்குகிறதாகவும் காலக் குறியறி சாஸ்திரிகள (meteorologists) கூறுகின்றனர். நமக்குக் கீழே பூமியின் உட்பாகத்தில் அக்கினிக் கடல் போன்ற வெப்பம் உண்டென்றும கூறுகிறார். மேலே மேகங்கள் பனியால் ஆனவை. ஆகாசக் கூரை இரார்விடில் நாம் குளிரால் உறைந்து மடிவோம். நம் பூமியின் மேற்பரப்பு எடுபட்டால் அககினியால் சாம்பாராவோம். மேலேயுள்ள குளிர்க்கடல் ஆகாசத்தை ஊடுருவிவரினும், கீழேயுள்ள அக்கினிக் கடல் பூமியின் மேற்பரப்பை ஊடுருவிவரினும் உலகம் அழியும். அல்லது சூரியனுடைய கதிர்வீச்சும் வெப்பமும் இப்போதுள்ள அளவிற்குக் கீழே இறங்குமானால் மடிவோம் இவற்றை இவ்வாறு நிலைநிறுத்தி வைத்தது யார்? தற்செயலாய் நடைபெறுமா?

நம் உடல் நம் உடலிலுள்ள ஒரு சொட்டு இரத்தம் நாளொன்றுக்கு ஒருமைல் தூரம சுற்றி வருகிறது நாம் சிந்திக்கும் மூளைப் புறணியின் எடை அரை அவுண்ஸ்தான். ஆனால் அதற்குள்ளிருக்கும் நரம்பு உயிரணுக்கள் 920 கோடி; உலகின் ஜனதொகையைவிட 5 மடங்கதிகம். இரத்தத்தைக் கட்டியாக்குகிற வைபிரின் இல்லாவிடில், காயப்படும்போது உடலிலுள்ள இரத்தமெல்லாம் வடிந்து மரணம் நேரிடும் நம்மை வருத்தும் விஷக் கிருமிகளை விழுங்கும் வெள்ளணுக்கள் நானூறாயிரங்கோடி. செவ்வணுக்கள் 25 பில்லியன். நம் நரம்புகளையும் தமனிகளையும் arteries) இணைத்தால் அது அத்லாண்டிக்மகா சமுத்திரத்தையும் தாண்டும். கால்ஷியம் போன்ற உலோக உப்புக்களும், ஹார்மோன்களும் எவ்வளவில் இருக்க வேண்டுமோ அவ்வளவில் மட்டுமே நம் உடலில் இருக்கின்றன. இவையாவும் தற்செயலா? "ஆதியில் தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி. 1:1) என்ற ஆதி வாக்கியம் அமரதன்மையது. இது காறும்யாமறிந்த விஞ்ஞானம் இதனைப் பொய்ப்பிக்கவில்லை.

## (இ) தீமையின் பிரச்சினை.

**“ஏதோ ஒரு குருட்டுச் சக்தியால் இவ்வுலகு இயங்குகிறதே ஒழிய ஒரு நுண்ணறிவுள்ள, கருணையுள்ள கடவுளால் இவ்வுலகு இயங்கவில்லை. ஏனெனில் உலகம் எங்கும் துன்பமயமாயிருக்கிறது” என்பது பிறிதொரு மறுப்பு.**

*சிலர் தீமைக்கு ‘விதிப்பயனே’ காரணம் என்பார். சிலர் கருமம் செய்தவன் பல்லக்கைச் சுமப்பான் என்பார்; தருமம் செய்தவன் பல்லக்கில் செல்வான் என்பார். “அறத்தாறி தென வேண்டா சிவிகை பொறுத் தானோடூர்ந்தானிடை”. புத்தர் சில திருத்தங்களோடு கருமாக் கொள்கையை ஒப்புக்கொண்டார். ஏசாயா பிறருக்காகத் துன்புறும் மாண்பினை ஏசாயா 53ம் அதிகாரத்தில் வரைந்தார். அதன்படி, உலக இரட்சகரான இயேசு நாதரே சிலுவையில் உயிர்த்தியாகம் செய்தார். “துன்பம் நிறைந்த இவ்வுலகை ஜெயித்தேன்” என்று வெற்றிச் சங்கம் ஊதினார். அதனையே இவ்வுலகுக்குச் சீடர் மூலம் எடுத்தோதினார், கிறிஸ்து சமயம் துன்பமற்ற வாழ்க்கையைத் தருவதாக வாக்களிக்கவில்லை. ஆனால் துன்பத்தை இன்பமயமாக்கிக்கொள்ளக்கூடிய ஒப்பற்ற சக்தியைத் தர வாக்களிக்கிறது. இவ்வுன்னத உண்மையை உணர்ந்த பவுலடிகள் எத்தனை எண்ணற்ற இன்னல்களை அனுபவித்தார் என்பதை அவர்மூலமே அறியலாம். “நான் அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், மிகுதியாய் அடிபட்டவன், பலமுறை மரண அவதிகளில் அகப்பட்டவன்; ஒன்று குறைய நாற்பது அடியாக ஐந்துதரம் யூதர்களால் அடிபட்டேன்; மூன்று தரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்று தரம் கப்பற்சேதத்தில் அகப்பட்டேன், நடுக் கடலிலே ஒரு இராப்பகல் போக்கினேன்; பலமுறை பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் உண்டான மோசங்களிலும், கள்வரால் வந்த மோசங்களிலும், என் ஜனத்தால் நேரிட்ட மோசங்களிலும், புறஜாதியாரால் ஏற்பட்ட மோசங்களிலும், நகரத்திலும் வனாந்தரத்திலும் சமுத்திரத்திலும் நேரிட்ட மோசங்களிலும், கள்ளச் சகோதரரால் உண்டான மோசங்களிலும், உழைப்பிலும, களைப்பிலும், பலமுறை கண் விழிப்புகளிலும்; பசியிலும் தாகத்திலும், பலமுறை உபவாசங்களிலும், குளிரிலும் நிர்வாணத்திலும் இருந்தேன்” (2 கொரி 11 : 23-27). இவ்வளவு இன்னல்களையனுபவித்த அவரே, “. ...கடவுளிடம் அன்புகூருகிறவர்களுக்கு, அதாவது அவர் தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு, சகலமும் நன்மைக்கு ஏதுவாக ஒத்து நடக்க அவர் செய்கிறாரென்று நமக்குத் தெரியும்”. (2 ரோமர் 8 : 28) என்று எழுதினார்.*

*இக்கால அறிஞர்கள் தீமையைப்பற்றி இருவிதக் கொள்கைகளை எடுத்துக் காட்டியுள்ளர். அவை : (1) தீமைக்குக் காரணம்; புறவயமான தீயசூழ்நிலையே (2) அகவயமான தவறான அனுசரணை (maladjustment)யே தீமைக்குக் காரணம. முதற் கொள்கையைக் கார்ல் மாாக்சும், பெர்னார்ட்ஷாவும் பரப்பினர். இரண்டாவது கொள்கையை ப்ரீட், ஜங் அட்லெர் முதலியோர் பரப்பினர். பெர்னார்ட்ஷா உலகின் சகல தீமைகட்கும் வறுமையே காரணம் என்றார்; அதற்கு மருந்து பணமே என்றார். அப்படியானால், செல்வத்தாலேற்படும் தீமைகளான மமதை, மேட்டிமை, டாம்*

பீகம், கொடுமை, தன்னலம், மாய்மாலம் ஆகியவற்றிற்குக் காரணம் யாது? கார்ல் மார்ஸ், முதலாளித்துவமே தீமைக்குக் காரணம் என்றும் தீமைக்கு மருந்து வர்க்கமற்ற சமுதாயமே என்றார். அப்படியானால் இன்று ருசிய நாட்டில் பாவமில்லையா? மேலும் உளநூலார் கருத்துப்படி அகவயமான தவறான அனுசரணையே தீமைக்குக் காரணம் என்றால் ஆவிக்குரிய பாவங்கட்குக் காரணம் யாது?

தீமையைப்பற்றி ஆராயும்போது கீழ்க்கண்ட குறிப்புக்களை மனதிற் கொள்ளவேண்டும் (1) உலகில் தீமைமட்டும் உண்டு என்பது ஒரு புற நோக்கு. உலகில் நன்மையும் உண்டு. (2) துன்பம் கூட்டுத்தொகையன்று. பலரின் துன்பங்களைக் கூட்டுத் தொகையாகக் கூறமுடியாது. முறையே 5 அடி 6 அடி உயரங்கள் உடைய இருவர் உயரம் 11 அடி அன்று இராமன் என்ற ஒருவருக்குப் பல்வலியிருக்கலாம். அதுபோலவே 365 பேருக்கு அவ்வூரில் பல்வலியிருக்கலாம். அதனால் இராமனுக்கு 365 நாட்களும் பல்வலியா? (3) கீழின உயிரினங்கள் இயற்கையோடிசைந்து வாழ்வதால் அவை துன்பமற்றுலவுகின்றன. பிற விலங்குகளால் அவற்றிற்குத் துன்பமிருப்பினும் அது குறுகிய காலத்தியது. விரைவில் தீர்வது. (4) கடவுளை விட்டு விலகல், தவறான நினைவு, தறுவன உணவு, தவறான உடை, தவறான உறைவிடம், தவறான பழக்க வழக்கங்கள் முதலியனவே உலகின் பெரும் பகுதியான துன்பத்திற்குத் தலைசிறந்த காரணங்கள். (5) உயரிய அறிவு படைத்த மனிதனுக்கே துன்பவுணர்வதிகம். அவனுக்கே வலியுணர்வு மையங்களும் அதிகம். எளிதில் சேதமுறும் கண்போன்ற உறுப்புக்களில் வலிமையங்கள் நிறைவாகவும், நன்கு பாதுகாக்கப்பட்டுள்ள மூளைபோன்ற உறுப்புக்களில் வலிமையங்கள் குறைவாகவுமுள. நம் சுரப்பிகள் அட்ரினின் கழிவை நம் இரத்தத்தில் கொட்டுகின்றன. அட்ரினின் இருதயத்தைத் துரிதம் செய்கிறது. ஜீரணக் கருவிகளைத் தாமதம் செய்கிறது. அதே சமயத்தில் போரிடும் சக்திகளைத் தயார்செய்கிறது. இதனால் மனிதன் வலியினின்றும் தப்பமுயல்கிறான். காயமுறினும், கொட்டுங்குருதியை உறையச் செய்வதும் காயத்தை ஆற்றுவதும் அட்ரினின் என்ற கழிவேயாம். துன்பத்தினின்றும் மனிதன் தப்ப, அவன் உடலிலேயே வலிமையங்களையும் பிற உறுப்புக்களையும் கடவுள் அமைத்துளர் (6) ஓராண்டில் இயற்கை விபத்துக்களால், தடுக்கக்கூடிய நோய்களால் மாள்பவர் தொகையிலும், ஒரு நாளிலே, ஒரு மணியிலே, போர்க்களத்திலே வீழ்பவர் தொகை பெரிது! போரில் இன்னார்தான் மாளவேண்டும். இன்னார்தான் வாழவேண்டும் என்று கடவுள் நியமித்தாரா? அப்படியானால் நல்லவர் வீழ்வதேன்? அல்லவர் வாழ்வதேன்? நம் தலைகட்குமேல் புள்ளினங்கள் பறப்பதை நாம் தடுக்கமுடியாதுதான். ஆனால் அவை நம் தலைகளில் கூடுகட்டிக் குடியிருக்காது தடுப்பது நம்மாலாகுமன்றோ? (7) இயற்கை உலகைப் படைத்து அது தானே தன் கடனைச் செய்யுமாறு சில விதிகளைக் கொடுத்திருப்பவர் கடவுளே. ஆனால் அவ்வியந்திரம் வேலை செய்யும்போது அதன் சக்கரத்தில் தீயர் பட்டாலும், தூயர் பட்டாலும் சாகவே சாவர். இங்கு தூய்மைப் பிரச்சினையுமில்லை. தீமைப் பிரச்சினையுமில்லை (8) கடவுள் "தீயோர் மேலும் நல்லோர் மேலும், தம் சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும், அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" (மத். 5 : 45)

"கண்ட சகோதரனில் அன்புகூராது, காணாத கடவுளை" நேசிப்பதாகக் கூறும் கபட நாடகர் மக்களே. "எங்கள் பிதாவே" என்று பன்முறை ஜெபித்தும், ஏற்ற தாழ்வைப் பெருக்கிச் சகோதரத்துவத்தையே கொலை செய்யும் கொடியர் மக்களே. "அன்றன்றுள்ள ஆகாரத்தை இன்று எங்கட்குத் தாரும்" என்று அடிக்கடி ஜெபித்தும் மலைபோல் செல்வத்தைப் பெருக்கு மதியீனர் மக்களே. "கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை" நிறைவாக்குவதே, அவர் திருமேனியான திருச்சபையின் கடன் என்பதை மறந்தவர் மக்களே. (கொலோ. 1 : 24). பொதுவாக உலகும் சிறப்பாகக் கிறிஸ்தவத் திருச்சபையும் செய்யத் தகாதவற்றைச் செய்த பாவத்திலும் செய்யத்தக்கவற்றைச் செய்யாது விடுத்த பாவமே அளவற்றது.

(9) பரிணாம உலகில் துன்பம் தவிர்க்க முடியாதது. **சார்லஸ் டார்வின்** "உயிரினங்களின் தோற்றம்" என்ற நூலில், "புற்றீக்கள் (humble bees) மூவிலையுடைய ஒருவிதப் புல்லினம் விருத்தியாக உதவுகிறது. ஆனால் ஒரு பகுதியிலுள்ள புற்றீக்களின் தொகை அப்பகுதியிலுள்ள வரப்பெலிகளின் தொகையைப் பொருத்திருக்கும். எலிகளின் தொகை அப்பகுதியிலுள்ள பூனைகளின் தொகையைப் பொருத்திருக்கும. இவ்விதமாகப் பூனைகள் எலிகளின் தொகையைக் குறைப்பதின் மூலமே மூவிலைப் புல்லினம் (clover) விருத்தியாகிறது" என்றார். "**உங்கள் வினாக்கட்கு விடைகள்**" என்ற நூலில் முதற் கேள்விக்குரிய விடையையும் காணக.

மேலும் உடல் நூலார் கருத்துப்படி, "புலால் அனைத்தும் புல்லே" (All flesh is grass). விலங்கினத்திற்குத் தாவரம் அல்லது தாவர பட்சிணிகளான உயிரினம் உணவாகிறது. விலங்கினம் வெளியிடும் கார்பன் டையாக்சைடிலிருந்து உயிர் வாயுவைப் பிரித்து விலங்கினங்கட்குதவுகிறது.' எனவே இயற்கை கொடிது என்பது கவிதா உண்மையேயன்றி விஞ்ஞான உண்மை யன்று. (10) நில நடுக்கம், புயல், எரிமலை, வெள்ளம், இடி போன்ற இயற்கை விபத்துகள் மனிதன் தோற்றத்திற்கு முன்னரே இருந்து வருகின்றன (11) இயற்கை விபத்துக்களும் சாதாரண விபத்துக்களும் நோய்களும் தெய்வ தண்டனையன்று.

ஆயினும் இயற்கை விபத்துக்கள் தெய்வ தண்டனை என்று பழைய ஏற்பாட்டின காலத்திய மக்கள் கருதினர். ஜலப்பிரளயம் (ஆதி 16, வாதைகள் (யாத். 8) எரிமலை (ஆதி 19) நில நடுக்கம் (எண். 16) கொள்ளை நோய் (2 சாமு. 24) ஆகியவற்றிற்கும், லேவி. 26 : 25, எண். 14 : 12, எரே. (4 : 12) எசே 5 : 12 முதலிய பகுதிகளில் கண்ட இயற்கை விபத்துக்கட்கும் கடவுளே காரணர் என்று அவர்கள் நினைத்தனர். காந்தியடிகளும் பீஹார் நில நடுக்கத்தைப்பற்றி இவ்வாறே கருதினார். நேருஜி அதனை மறுத்தார். மத். 24 : 7, லூக். 21 : 11 முதலியவற்றிலும் அவ்வெண்ணமே காணப்படுகிறது. ஆனால் இக்கருத்து தவறு என்று யோவா. 9 : 2, 3லும், லூக்கா. 13 : 4லும் இயேசுநாதர் கண்டனம் செய்துளர். மற்ற விபத்துக்களும் மனிதனின் அரைகுறையான இயந்திரசாதனங்களாலேயே ஏற்படு

கின்றன. (12) தனியாளின் பாவத்தாலும், சமுதாயத்தின் கூட்டுப் பாவத்தாலும், பல தீமைகள் உண்டாகின்றன. ஆயினும் சமுதாயம் நன்மைகளும் தந்திருக்கிறது. முன்னோர் நன்கொடைகள் எண்ணற்றவை. (13) பிறவியில் அங்கவீனராய்ப் பிறப்பதற்குக் மரபு நிலை (Heredity)க்கோளாறே காரணம். (14) பஞ்சம் தடுக்கக்கூடியது. இன்றைய உலகு முந்திய உலகிலும் நவீன வாகன வசதிகளால சுருங்கி விட்டமையால் ஒரு பகுதியிலுள்ள நிறைவால், பிற பகுதியின் குறைவைச் சரிக்கட்ட முடியும். சகாரா எப்போதும் பாலையாயிருந்ததில்லை சகாராக் காடுகளில் காட்டெருமைகள் உலாவினதாக எகிப்தியப் பழ நூற்கள் கூறுகின்றன. மறைந்த நதிகளிலும், தூர்ந்து போன ஏரிகளிலும் நின்ற மரங்களின் இற்ற பகுதிகள் இன்றும் உள. அரபியர் முதன் முதலாக ஆப்பிரிக்காவில் குடியேறின போது, காடுகளை அழித்தனர். காற்றும் தன் வேலையைச் செய்து சகாராச் சோலையைப் பாலையாக்கிற்று. எனவே காட்டை அழிப்பவர் தம் நாட்டையே அழிப்பவர் ஆவர்.

## (ஈ.) உலகில் ஏற்றத்தாழ்விருப்பதேன்?

உலகில் சம நிலை நிலவ, முதலாளித்துவம், தொழிலாளித்துவம் என்டவற்றுள் உள்ள நலங்களைத்திரட்டிக் கிறிஸ்தவ போதனையை அடிப்படையாகக் கொண்டு புதியதொரு பொருளாதாரத் திட்டத்தை வகுக்கவல்ல "கார்ல் மார்க்ஸ்கள்" தேவை. ஆதியாகமம் 1 : 26ல் கண்டபடி, "பின்பு தேவன்: தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும், மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள்" என்றார் இதன்படி உரிமை மக்களின் பிறப்புரிமை அது கடவுளின் ஈவு. இன்று உலகில் உரிமையில் லாவிடில் அதற்குக் காரணர் கடவுளல்லர். மக்களே காரணர். பழைய ஏற்பாட்டில் யூதரின் சம நிலைக் கொள்கை லேவி 25, 26லும் 19 : 14லும் விளக்கப்பட்டுள. டம்மெலோ என்ற அறிஞர் "பேராசை அபகரித்தல் ஆகியவற்றை ஒடுக்கவும் அளவுகடந்த செல்வப் பெருக்கைத் தடுக்கவும், சொத்துப் பிரிவினையைச் சமப்படுத்தவும், ஏற்பட்ட இச்சமூகச் சட்டம் நன்கு கவனிக்கத்தக்கது" என்றார். 1 இராஜா. 21, 2 இராஜா. 9, ஆமோ. 4 : 4, 5 : 21—24, ஓசியா 6 : 6, ஏசாயா 1 : 10—17, மீகா 3 : 10, லூக்கா 4 : 18—19 முதலிய பகுதிகள் சமூகச் சம நிலைபற்றிய அறைகூவல்களே. மேலும் இவ்வுலகம் தனியாளுக்கோ, தனிச் சமூகத்திற்கோ, தனி நாட்டிற்கோ உரிமைப் பொருளன்று என்று சங்கீதம் 24 : 1ம் சங். 89 : 11ம், 1 கொரிந்தியர் 10 : 26ம் தெளிவாய்க் கூறுகின்றன. எனவே சமநிலை கடவுள் சித்தமே. சமநிலையின்மைக்குக் காரணம் மனிதனின் தன்னலமேயாம். ஆயினும் மனிதனே எல்லாம்" என்ற கொள்கை எமக்குடன் பாடன்று 13 கோடி மக்களையுடைய அமெரிக்காவின் வாங்கும் சக்தி 50 கோடி மக்களையுடைய ஐரோப்பாவின் வாங்கும் சக்தியிலும் அதிகமாயிருப்பதற்குப் புது முறை விவசாயமே காரணம். "ஆகாயப் பூ நாறிற்று" என்ற இல்பொருளுவமை இன்று உள்பொருளுவமையாக மாறிற்று. ஏனெனில் விஞ்ஞான அறிவால் நிலமின்றியும் பயிரிட வழியுண்டு.

ஆகாயத்திலும், ஆழ்ந்த கடலின் அடியிலும், அதன் மேலும் பயிரிடும் சாத்தியங்கள் உள. இயந்திர சாதனத்தால், இரசாயன உரத்தால், தேய்வுறு விளைவு விதி (Law of Diminishing Returns) இன்று பொய்ப்பிக்கப் பட்டது. 1800ல் மால் தூஸ், தம் மக்கட்பெருக்கக் கொள்கையை வெளியிட்டபோது, உலக ஜனத்தொகை 92 கோடியாயிருந்தது 1939ல் 208 கோடியானது. ஆயினும 140 ஆண்டுகட்கு முன் இருந்ததைவிட, மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தே வந்திருக்கிறது. அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள. ருசியாவிலும் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. ஒரு வேளை நம் நாட்டிலும் பத்தாண்டுத் திட்டம் பூர்த்தியாகும்போது மக்கள் வாழ்க்கைத்தரம் உயர இடமுண்டு. சம நிலையும் ஓரளவு நிலவக்கூடும். எனவே பஞ்சம், பட்டினி, சம நிலையின்மை ஆகியவற்றிற்குக் கடவுள் காரணரல்லர்.

### அப்படியானால் அநியாயக்காரரை ஏன் கடவுள் ஒடுக்கவில்லை?

கடவுள் நீடிய சாந்தமும் பொறுமையுமுள்ளவர். கொடிய மகனைக் கொல்வானோ தகப்பன்? மகன் சீர்திருந்தத் தருணம் கொடுப்பது போலவே, மக்கள் மனந்திரும்புமாறு கிருபையின் காலத்தைக் கடவுள் கொடுத்துளர். எனினும் இக்கேள்வியை உண்மையாகவே கேட்போமா? "காக்கா" பிடிக்கிற "மூட்டையடிக்கிற", கோள்சொல்லுகிற கோள் கேட்கிற, மொட்டைக் காகிதம் எழுதுகிற, அடுத்துக்கெடுக்கிற, நட்பைப் பிரிக்கிற, அவதூறு பேசுகிற, மாய்மாலம்செய்கிற, பொய்க்கணக்கு எழுதுகிற, கைக்கூலிவாங்குகிற, ஏமாற்றுகிற, ஜாதிபேதம் பார்க்கிற, ஏழைகளை ஒடுக்குகிற, பதவியைத் தனலமாக்குகிற, பத்துப் பிரமாணங்களை மீறுகிற, என்னையும் உன்னையும் ஏன் கடவுள் தண்டியாதிருக்கிறார்? சிந்திப்போமாக. தீமை தன்னையே தோற்கடிக்கும். அக்கிரமம் இன்றோ, பிறகோ, கட்டாயம் அதன் பலனை யுடையும். கடைசி நியாயத்தீர்ப்புண்டு

இவையாவும் சொன்ன போதிலும் உலகில் துன்பமில்லை என்று சொல்வதற்கில்லை. இம்மையின் குறைவுகள் மறுமையில் நிறைவாக்கப் படும். மக்களின் ஆளுமை (personality) யைப் பரிபூரணப்படுத்துவதற்கு உலகின் துன்பம் ஒரு பயிற்சிக்கூடம் என்பதை மறுக்கும் இங்கர்சால் போன்றவர்கள், "நரக வேதனையும்" ஒரு பயிற்சிக்கூடம் தானே என்பர். "நரகம்" என்பதை ஓரிடம் என்று தவறாகக் கருதினதாலேயே இவ்வாறு நகையாடினார் இங்கர்சால். கடவுளை விட்டுப் பிரிதலே "நரகம்" கடவுளோடிருத்தலே "மோட்சம்" என்பதே எம் கருத்து. இக்கருத்துக் காதாரம் யோவான் 17 : 3ம் 5 : 24ம். (தொடரும்)

---

# சில முக்கிய அறிவிப்புகள்

## (அத்தியட்சாதீன இளைஞர் ஊழியன்)

I. வாலிபர் ஞாயிறு.

கர்த்தருக்குச் சித்தமானால் வருகிற அக்டோபர் மாதம் 9ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, நமது அத்தியக்ஷாதீனம் எங்கும் வாலிபர் ஞாயிறாக ஆசரிக்கப்படும். அதற்கென்று விசேஷித்த ஆராதனை

முறைமை தயாராகிக்கொண்டிருக்கிறது. தயாரான பின் நமது அத்தியக்ஷாதீன குருமார் யாவருக்கும் நகல்கள் அனுப்பப்படும். சேகரிக்கப்படும் காணிக்கையை அத்தியக்ஷாதீன இளைஞர் ஊழியத்திற்கென்று நன்கொடையளிக்க விரும்புவோர், தயவுசெய்து அதனை அத்தியக்ஷாதீன பொக்கிஷதாருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

II. அகிலலோக ஓய்வுநாட் பாடசாலைகளின் ஞாயிறு.

இந்த வருடம் நவம்பர் மாதம் 6ம் தேதி, அகிலலோக ஓய்வுநாட் பாடசாலைகளின் ஞாயிறாக ஆசரிக்கப்படும் இதற்கென்று விசேஷித்த ஆராதனை முறைமை தயாராகிக்கொண்டிருக்கிறது. கா. நோபன் என்ற கிறிஸ்தவப் பெண்மணியின் வரலாறு, நாடக ரூபத்தில் அவ்வாராதனையில் இணைக்கப்பட்டுள்ளது. அந்த நாடகத்தை மேற்படி வைபவத்தின்போது எல்லா ஓய்வுநாட் பாடசாலை மாணவரும் நடித்தல் நலம்.

கா. நோபன் என்ற அக்கிறிஸ்தவப் பெண்மணி கிறிஸ்துவத்தை முதன்முதலாக தழுவிய அஸ்ஸாம் வாசியாவர். அன்னாரது படம் தாங்கிய, ஸீல்கள் (Seal) 32 கொண்ட ஒரு புத்தகத்தின் விலை ரூபாய் இரண்டு. The Administrative, Secretary I.S.S.C. Coonoor என்ற விலாசத்திற்கெழுதி மேற்படி புஸ்தகங்களை பெற்றுக்கொள்ளவும். ஆராதனை முறைமை, ஒவ்வொரு ஸ்தலகுருவுக்கும், தயாரானவுடன், அனுப்பிவைக்கப்படும்.

III. உயர்நிலைப்பள்ளி மாணவரின் ஆவிக்குரிய முகாம்.

இந்த முகாம், வழக்கமபோல் குற்றாலத்தில், செப்டம்பர மாதம், 17—20 தேதிகளில் நடைபெறும். அவ்வமயம் விசேஷித்த ஆவிக்குரிய கூட்டஙகள் நடைபெறும. மிஷன் பாடசாலைகளிலன்றி பிறபாடசாலைகளில் பயிலும் மாணவர்களையும் இக் கூட்டங்களுக்கு அழைக்கிறோம். மேலும் விபரம் வேண்டுவோர், Mr. M. Devadasan B.A., L.T., Schwartz High School, Ramnad என்ற விலாசததிற்கெழுதி பெற்றுக்கொள்ளவும். பொருள் கிறிஸ்தவ சாட்சி.

---

## சுகாதாரக் குறிப்புகள்

(கனம் ஆலிவ் லார்பீயர் அம்மாள்)

"தொத்து நோய்களைத் தடுக்கும்முறை" என்ற ஓர் நூல் வெளிவந்துள்ளது. அதில் கண்ணோய், ஜலதோஷம், சளிப்பிடித்தல், சிரங்கு, காய்ச்சல், காசநோய், விஷசுரம் முதலியவைகளைத தடுக்கும் முறை கூறப்பட்டிருக்கிறது. கீழ்க்கண்ட முறைகளை அனுஷ்டித்தால் மேற்கண்ட வியாதிகள் வராமலும் பரவாமலும் தடுக்கலாம் :—

1. அனுதினமும் ஸ்நானம் செய்து தேகத்தை சுத்தமாய் வைத்தல்; சோப்புகளை அல்லது சீயக்காய் உபயோகிக்கலாம்.

2. சாப்பிடு முன்னும், வியாதியஸ்தரை சந்தித்த பின்னும் கைகால்களைக் கழுவவேண்டும். சோப் அல்லது சீயக்காய் உபயோகப்படுத்தலாம்.

3. கண், காயங்கள், இவைகளுக்கு சிகிட்சை செய்யும் முன்னும் பின்னும் கைகளைக் கழுவி சுத்தம் செய்.

4. தும்மல், துாத்தல், ஆகியவற்றால் ஆகாயத்தை அசுசிப் படுத்தாதே. நீ இவைகளுக்கு விலகு.

5. கொசு, ஈகு உண்டாகி பலுகக்கூடிய நீர்தேக்கங்களை அகற்று; வீட்டையும் வீட்டின் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வை.

---

# விளம்பரம்

## மதுரை, இராமநாதபுரம் அத்தியட்சாதீன உயர்நிலைப்பள்ளி மாணவிகளின் முகாம்

இடம்: கொடைக்கானல், "Restabit, Neutral Saddle".
செப்டம்பர் 16ம் தேதி முதல் 21ம் தேதி முடிய.
பேச்சாளர். ஸ்ரீமதி வைரணபிள்ளை.

பேசும் பொருள். "கிறிஸ்தவ சாட்சி"

யாவரும் சந்தோஷமாக இருப்பதற்காக பேச்சுப் போட்டி, விளையாட்டுகள், பாட்டு வகுப்புகள், உல்லாசப் பிரயாணம் முதலியவை நடைபெறும். Miss M. Brown அவர்கள் இந்த முகாமின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவார்கள். பிரயாணச் செலவு உட்பட ஒவ்வொருவரும் செலுத்தவேண்டிய தொகை ரூ. 7. பிரவேசக் கட்டணம் அணா 8 ஒவ்வொருவரும் செலுத்தவேண்டும். நீங்கள் யாவரும் இம்முகாமிற்கு வரும்படி அன்பாய் அழைக்கிறோம்.

எம். தேவராஜ் அம்மாள்.
எம். டி. ப்ரௌன் ,,
ரூபி தேவசகாயம் ,,
ரூபி அமுதமணி ,,

---

## உலக விவகாரம்

(கனம் இ. இ. உவைட் ஐயர்)

**அணுசக்தி நிபுணர்கள்.** ஜெனிவா நகரில் உலகின் பல தேசங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள் 1200 பேர் இரண்டுவாரங்களாகக்கூடி அணுசக்தியைப்பற்றிய பல இரகசியங்களையும், நாசவேலைக்கன்று, ஆக்க வேலைக்காகவே அணுசக்தி உபயோகப்படுத்தப்படவேண்டுமென்ற விடயங்களையும் பற்றி கலந்து கொண்டனர். சோவியத்திலிருந்தும் விஞ்ஞானிகள் வந்திருந்தனர்.

**கொரியா.** அங்கு ஏற்பட்ட தற்காலிகமான யுத்தநிறுத்த நிபந்தனைகள் தென் கொரியருக்கு திருப்தியில்லை. யுத்தநிறுத்தக் கமிஷனிலுள்ள பொதுவுடமைப் பிரதிநிதிகள் தங்கள் கடமையை நீதியாய்ச் செய்யப் பின்வாங்கினார்கள் என்பதே தென் கொரியருடைய புகார். இந்தக் கிளர்ச்சி இப்போது சற்று குறைந்திருக்கிறது.

**வல்லரசுகளின் கூட்டுறவு.** உலக அரசியல் நெருக்கடியைக் குறைக்கக்கூடிய பல நிகழ்ச்சிகள் சமீபகாலத்தில் ஏற்பட்டுள்ளன. லண்டனுக்கு வருமாறு ருசியத்தலைமை அமைச்சர் புல்கானினுக்கும், பொதுவுடமைக் கட்சிச் செயலாளர் கனம் நிகிடா குருசேவுக்கும் அழைப்புக் கிடைத்ததை அவர்கள் ஒப்புக்கொண்டனர். இதுவரை ருசியத்தலைவர்கள் தம் நாட்டை விட்டு மற்ற நாடுகளுக்கு மரியாதைக்காகப் போவது இதுவே முதல் தடவை. ருசியாவும் பிரஞ்சுதலைமை அமைச்சரையும் பிரிட்டன் தலைமையமைச்சரையும் தங்கள் நாட்டிற்கு வரும்படி அழைத்துள்ளது.

**சீனு—அமெரிக்கா ஆலோசனை.** அமெரிக்காவும் பொதுவுடமைச் சீனுவும் முதல் தடவையாகவும் அதிகாரப் பூர்வமாகவும் தங்களின் சில பிரசனைகளை ஆலோசித்து வருகின்றனை. இதன் பலனுய் சீனுவில் கைதிகளாயிருந்த 11 அமெரிக்க விமானிகள் விடுதலையளிக்கப்பட்டனர். அமெரிக்காவிலுள்ள சீனு மாணவர்கள் இஷ்டப்பட்டால் சுயநாடு திரும்ப உத்தரவு அளிக்கப்பட்டது. இவை நாம் வரவேற்கத்தக்க நடவடிக்கை.

**சுதந்திரதினம்.** "நம் தாய்நாட்டின் சுதந்திரம் எளிதில் கிடைத்தது. இதர நாடுகள் சுதந்திரமடைய வெகுபாடுகள் பட்டன. கததியின்றி ரத்தமின்றி கிடைத்த சுதந்திரத்தைப் பாதுகாக்க நாம் இனிமேல் தியாகம் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும்" என்கிறார் ராஜாஜி அகாலமரணம், அரைப்பட்டினி, அறிவீனம், அஞ்ஞானம், அவபக்தி எனத்தாண்டவமாடும் பல பேய்களை அகற்றுவதே தேசபக்தரின் கடமையாகும்.

**கோவாப் போராட்டம்.** இந்தியாவின் மேற்குக்கரையில் புள்ளிகள் போன்ற மூன்று பகுதிகளில் போர்த்துக்கேசியருடைய ஆளுகை உண்டு. இப்பாகங்களிலுள்ள மக்கள் இந்தியாவோடு இணைய ஆசிக்கிறாகள். பெரிய பாகங்களைக் கட்டியாண்ட ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரரும் கண்ணியமாக

சுதந்திரம் கொடுத்து வெளியேறியிருக்கும்போது போர்த்துக்கல் இப்படிப்பட்ட மனப்பான்மையோடிருப்பது வியக்கத்தக்க விடயமாகும். விடுதலைப்போராட்டத்தில் ஆகஸ்டு மீ 15-ம்௳ ஈடுபட்ட பல சத்தியாகிரகிகள் போர்த்துக்கேசியத் துருப்புகளால் துன்புறுத்தப்பட்டனர். இதில் பங்கு கொண்ட சுபித்திரா தேவி என்னும் அம்மையார் நம் மதுரையைச் சேர்ந்தவர்கள் என்பது நமக்கு பெருமையளிக்கிறது.

**அமெரிக்கன் போர்டு காரியதரிசி.** வெகு காலம் அமெரிக்கன் போர்டில் அங்கத்தினராயும் உத்தியோகஸ்தராயுமிருந்து சிறந்த சேவையாற்றிய கனம் ரூத் சீபெரி அம்மாள் ஜூலை மீ 30-ம்௳ காலமானார்கள். சில ஆண்டுகளுக்குமுன் மதுரைக்கு வந்த போர்டாருடைய பார்வையாளர் குழுவினரில் அம்மாளவர்களும் ஒருவர்.

---

Lenox Press, Pasumalai, 30—9—1955. 500 C.